விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 25 வெள்ளிக்கிழமை (10.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 265

## பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை மீளாய்வு செய்க

ஐ.நா விசேட அறிக்கையாளர்

3ஆம் பக்கம் பார்க்க

## ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டாலும் கடுமையான கட்டுப்பாடு அமுல்படுத்தப்படும்

### இன்றைய கூட்டத்தில் இறுதித் தீர்மானம் - ஹேமந்த ஹேரத்



(கொழும்பு)
ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டாலும் கடுமையான கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்படும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் தெரிவித்

15

### கோவிட் ஒழிப்பு செயலணியிலிருந்து

# அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் விலகுவதாக அறிவிப்பு



### நிபுணர் குழுவின் பரிந்துரையை பின்பற்றவில்லையென தெரிவிப்பு

*(கொழும்பு)*
கொரோனா ஒழிப்புத் தொடர்பாக நிபுணர் குழுக்களால் பரிந்துரைக்கப்பட்ட விஞ்ஞான ரீதியிலான பரிந்துரைகளை அரசாங்கம் பின்பற்றாததனால் கோவிட் ஒழிப்பு செயலணியிலிருந்து விலகுவதாக இலங்கை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

*(15ஆம் பக்கம் பார்க்க)*

### தனங்கிளப்பில்

## பெண் ஒருவரின் சடலம் மீட்பு

(சாவகச்சேரி)
சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனங்கிளப்பு பகுதியில் உள்ள

15

### நாட்டில் மேலும்

## 175 பேர் மரணம்

(கொழும்பு)
நாட்டில் மேலும் 175 பேர் கோவிட் - 19 நோயினால் உயிரிழந்

15


## வவுனியாவில் 149 பேருக்கு கோவிட் உறுதி

(வவுனியா)
வவுனியாவில் மேலும் 149 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

15

## 12 - 18 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு தடுப்பூசி

### பாடசாலைகள் விரைவில் மீண்டும் திறக்கப்படும்



(கொழும்பு)
12 - 18 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கு விரைவில் கோவிட் - 19 தடுப்பூசி

15



## ராஜபக்ஷ அரசால் அபிவிருத்தி முன்னெடுப்பு

அமைச்சர் நாமல் யாழில் தெரிவிப்பு

06

### வடக்கில் அதிகரித்த கோவிட் பலி


## 6 மின் மயானங்கள் அமைக்க அனுமதி

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாணத்தில் உடனடியாக மேலும் 6 மின் தகன மயானங்கள் அமைப்பதற்கு மாகாண உள்ளூராட்சிஆணையாளர்

15

### யாழ்ப்பாணத்தில் 9 பேர் உட்பட

## வட மாகாணத்தில் 19 பேர் கொரோனாத் தொற்றால் மரணம்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் மேலும் 9 பேர் உட்பட வட மாகாணத்தில் 19 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற சுழிபுரத்தைச் சேர்ந்த 50 வயதுடைய பெண் ஒருவரும் சாவகச்சேரியைச் சேர்ந்த 60 வயதுடைய பெண் ஒருவரும் காரைநகரைச்

15

## அரசின் போலித் தகவல்களுடன் ஐ.நா உயர்ஸ்தானிகருக்கு கடிதம்

### நீதியரசர் விக்னேஸ்வரன் ஆதங்கம்



(யாழ்ப்பாணம்)
ஐ.நா உயர்ஸ்தானிகருக்கு, இலங்கை அரசாங்கத்தால் போலித் தகவல்களுடன் அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பில் ஆதங்கம் வெளியிடப்பட்டுள்ளது.
இந்த விடயத்தை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின்

15

### முடக்கத்தை நீக்குவதாயின்

## தொழில்நுட்ப ரீதியிலான தீர்மானம் வேண்டும்

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)
நாட்டில் அமுல்படுத்தப்பட்டிருக்கும் தனிமைப்படுத்தல் சட்டத்தை

15

# அந்நிய செலாவணி விகிதத்தை பாதுகாக்க இறக்குமதியாகும் 623 பொருட்களுக்கு உத்தரவாத தொகை அதிகரிப்பு

## இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

**அந்நிய செலாவணி விகிதத்தைப் பாதுகாக்கும் முகமாக நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் 623 பொருட்களுக்கு 100% உத்தரவாத தொகையை செலுத்த வேண்டும் என இலங்கைக்கான மத்திய வங்கி அறிவித்துள்ளது.**

இந்த முடிவு, நாணய மாற்று விகிதத்தின் ஸ்திரத்தன்மை மற்றும் வெளிநாட்டு நாணய சந்தை பணப்புழக்கத்தைப் பாதுகாப்பதற்கான தொடர்ச்சியான முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக மத்திய வங்கிதெரிவித்துள்ளது.

இந்த பட்டியலில், கையடக்க தொலைபேசிகள் மற்றும் நிலையான தொலைபேசிகள், மின்விசிறிகள், டிவி, குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள், டிஜிட்டல் கமராக்கள், ஹீட்டர்கள் மற்றும் மின்அடுப்புகள், குழந்தைகளின் ஆடைகள், ஜெர்சி, இரவு ஆடைகள் மற்றும் பிஜாமாக்கள் போன்ற ஆடை மற்றும் பாகங்கள், சட்டைகள் மற்றும் பிளவுசுகள், டிராக் சூட் மற்றும் நீச்சலுடை, ரீசேட்கள், காலணிகள், கடிகாரங்கள், சன்கிளாஸ்கள் மற்றும் பிற பாகங்கள்.

வீட்டு மற்றும் தளபாடப் பொருட்கள், ரப்பர் டயர்கள், எயார் கண்டிஷனர்கள், புதிய ஆப்பிள்கள், திராட்சை, ஒரேஞ்சு மற்றும் உலர்ந்த பழங்கள், பழச்சாறுகள், அழகுசாதன பொருட்கள் மற்றும் வாசனை திரவியங்கள் மற்றும் ஒப்பனை பொருட்கள், பியர், வைன் போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீர், தானியங்கள் போன்ற பிற உணவுகள் மற்றும் பானங்கள், ஸ்டார்ச், சாக்லேட்டுகள், சீஸ் மற்றும் வெண்ணெய், இசைக்கருவிகள், புகையிலை பொருட்கள், பொம்மைகள் மற்றும் எழுதுபொருட்கள் போன்ற உணவு அல்லாத பிற நுகர்பொருட்கள் உள்ளடங்குகின்றன. (ம-03)

# வன்முறைக் கும்பலினால் வீடு புகுந்து தாக்குதல்

## கிளி. சிவபுரம் பகுதியில் சம்பவம்

(கண்டாவளை)

கிளிநொச்சிபரந்தன் சிவபுரம் பகுதியில் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள காலப் பகுதியில் நேற்று முன் தினம் மாலை 25இற்கும் மேற்பட்ட கும்பல் ஒன்று வீடு ஒன்றுக்குள் புகுந்து வீட்டில் இருந்த குடும்பப் பெண் மற்றும் குழந்தைகள் ஆகியோர் மீது கோடரி மற்றும் கொட்டன் என்பவற்றால் தாக்குதல் மேற்கொண்டதுடன் வீட்டின் பொருட்களையும் அடித்து சேதப்படுத்தியுள்ளது.

இதன்போது வீட்டுக்குள் புகுந்த கும்பல் மீது குறித்த வீட்டின் உரிமையாளர் மேற்கொண்ட தாக்குதலில் ஒருவர் காயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் ஏற்கனவே பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள். இவர்கள் இவ்வாறான பல குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஊரடங்கு காலத்தின் போது பரந்தன் பகுதியில் 13 வீடுகளுக்குள் புகுந்து இரவு நேரங்களில் தாக்குதல் மேற்கொண்ட சம்பவத்துடன் தொடர்புபட்டவர்ளே இச் சம்பவத்தையும் மேற்கொண்டதாகபிரதேசமக்கள்தெரிவித்துள்ளனர். (ம-03,315)

# யாழ். போதனா பரிசோதனையில் வடக்கில் 71 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் 37 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று பிசிஆர் பரிசோதனை மூலம் 71 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்திய சாலை ஆய்வுகூடத்தில் 289 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவற்றின் விபரம் வருமாறு,

**வவுனியா மாவட்டத்தில் 37 பேர்**

வவுனியா விமானப்படை முகாமில் 27 பேர், வவுனியா மாவட்ட வைத்தியாசாலையில் 03 பேர், செட்டிகுளம் ஆதார வைத்தியசாலையில் 03 பேர், நெடுங்கேணிபிரதேச வைத்தியசாலையில் 02 பேர், பூவரசங்குளம் பிரதேச வைத்தியசாலையில் 02 பேர்.

**யாழ்.மாவட்டத்தில் 17 பேர்**

யாழ்.போதனா வைத்தியசாலையில் 11 பேர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 02 பேர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 02 பேர், நொதேர்ன் சென்றல் ஹொஸ்பிரலில் ஒருவர், காங்கேசன்துறை கடற்படை முகாமில் ஒருவர்.

**முல்லை. மாவட்டத்தில் 05 பேர்**

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் 03 பேர், மல்லாவி ஆதார வைத்தியசாலையில் 02 பேர்.

**கிளிநொச்சி மாவட்டத்தில் 07 பேர்**

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில்03 பேர், இரணைமடு விமானப்படை முகாமில் 03 பேர், பளை பிரதேச வைத்தியசாலையில் ஒருவர்.

**மன்னார் மாவட்டத்தில் 05 பேர்**

மன்னார் மாவட்ட வைத்திய சாலையில் 03 பேர், மன்னார் கடற்படை முகாமில் ஒருவர், வெள்ளாங்குளம் விமானப்படை முகாமில் ஒருவர் ஆகியோர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-03)

# கடந்த நான்கு நாட்களில் மூன்று பொலிஸார் கொரோனாவால் மரணம்

(கொழும்பு)

இம்மாதம் 04ஆம் திகதி முதல் 07ஆம் திகதி வரையிலான நான்கு நாட்களில் மூன்று பொலிஸார் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அமைச்சு ஒன்றின் ஒருங்கிணைப்புப் பிரிவில் பணியாற்றி வந்த பொலிஸ் அதிகாரி ஒருவரும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவில் உப பொலிஸ் பரிசோதகராகப் பணியாற்றி வந்தவரும் மற்றும் ஹிக்கடுவ பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் அதிகாரியாகப் பணியாற்றி வந்த ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்துள்ள மூன்று பொலிஸ் அதிகாரிகளில் இருவர் கொரோனாத் தடுப்பூசிகள் இரண்டையும் பெற்றுக் கொண்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒருவர் ஒரு தடுப்பூசியேனும் பெற்றுக்கொள்ளாதவர் என்றும் கூறப்படுகின்றது. (ம-03)

# அமைச்சர்கள், எம்.பிக்கள் 8 பேர் தனிமைப்படுத்தலில்

தற்போதைய நிலையில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்மர் தனிமைப்படுத்தலில் உள்ளனர்.

அமைச்சர்களான சமல் ராஜபக்ச, பந்துல குணவர்தன, இராஜாங்க அமைச்சர்களான லொஹான் ரத்வத்த, டீ.வி. சாணக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.பி.திஸாநாயக்க, அசங்க நவரத்ன, கெவிந்து குமாரதுங்க மற்றும் டயானா கமகே ஆகியோரே இவ்வாறு தனிமைப்படுத்தலில் உள்ளனர்.

இதேவேளை, அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் குருநாகல் மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் அசங்க நவரத்ன ஆகியோர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான நிலையில் தனிமைப்படுத்தலில் உள்ளனர். ஏனையவர்கள் கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணிய நிலையில் தனிமைப்படுத்தலில் உள்ளனர். (ம-03)

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983 இல் பிறந்த சூரியன். செவ்வாய் - 10. ரோகினி நட்சத்திரம். இடபராசி முதலாம் பாதம், தனியார் வர்த்தக நிலையத்தில் பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

**சீதனம் பெரிதளவில் எதிர்பார்க்கப்படவில்லை.**

**077 582 7035**

**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி **கவிதா அகிலன்** அவர்களின் அன்புத் தந்தை

**திரு. செங்கேணி சுப்பிரமணியம்**

தோற்றம் :12.05.1945
மறைவு : 09.09.2021

அவர்கள் நேற்று (09.09.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா / பெரியபுலம் மகா வித்தியாலயம்**

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மீளாய்வு செய்ய வேண்டும்

## ஐ.நா.விசேட அறிக்கையாளர்கள்

**(கொழும்பு) இலங்கையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை சர்வதேச மனித உரிமைகள் தரத்திற்கு கொண்டுவர மீளாய்வு செய்ய ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளர்கள் பரிந்துரைத்துள்ளனர்.**

மேலும் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை தடுத்து வைத்திருப்பது குறித்தும் விசேட அறிக்கையாளர் மேரி லாலர் உட்பட ஏழு ஐ.நா. அறிக்கையாளர்கள் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளனர்.

அதிகரித்து வரும் வெறுப்பு பேச்சு, வன்முறை மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எதிரான நடவடிக்கை தொடர்பாக மனித உரிமை வழக்குகளில் ஈடுபடுவதைத் தடுக்கும் ஒரு முயற்சியாக இந்த கைது இருக்கலாம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமையானது விசாரணை இன்றி நீண்ட நாள் தடுத்து வைத்திருக்க அனுமதிக்கப்பட்டுள்ளமை குறித்தும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (நி-5)

# எட்டு உறுப்பினர்கள் கொண்ட எல்லை நிர்ணயக்குழு நியமனம்

## அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

புதிதாக பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உருவாக்கவும் தற்போதுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை மீள் நிர்ணயம் செய்யவும் 8 உறுப்பினர்கள் கொண்ட எல்லை நிர்ணயக் குழுவை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இக்குழுவின் தவிசாளராக ஓய்வுபெற்ற அமைச்சின் செயலாளர் டபிள்யு.கே.கே. குமாரசிறியும் உறுப்பினர்களாக நில அளவையாளர் நாயகம் டபிள்யு.விஎம்.எஸ்.பி.தென்னக்கோன், ஓய்வுபெற்ற மாவட்ட செயலாளர் நிமல் அபேசிறி, ஓய்வு பெற்ற நில அளவையாளர் நாயகம் கலாநிதி.கே.தவலிங்கம் , தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தைச் சேர்ந்த பிரதி அத்தியட்சகர் ஏ.ஜீ.எஸ். காரியவசம், தலைமைப் பதிவாளர் திணைக்களத்தைச் சேர்ந்த மேலதிக பதிவாளர் நாயகம் எம்.எம்.ஆர். எஸ்.கே. அமரக்கோன், பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் ஏ.எம். நஹரியா, நீதி அமைச்சின் உதவிச் செயலாளர் சந்திமா வெலிகல்ல மற்றும் நிர்வாகச் சேவையைச் சேர்ந்த சிரேஸ்ட ஓய்வுபெற்ற கே.ஏ.கே.ஆர். தர்மபால ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (நி-5)



யாழிற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை பார்வையிட்டதுடன், எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்தார். (படம்:-சிவானந்தன், கஜிந்தன்)

# இலங்கை மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவிப்பு

(கொழும்பு)

2021-22 கல்வியாண்டில் ஆயுள்வேதம், யோகா, யுனானி, சித்தமருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆகிய துறைகளில் பட்டப்படிப்பு/பட்டப்பின்படிப்பு/கலாநிதி ஆகிய கற்கைநெறிகளை தொடர்வதற்கு விரும்பும் இலங்கை பிரஜைகளுக்கு ஆயுஷ் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் இந்திய உயர்ஸ்தானிகராலயம் புலமைப் பரிசில்களை அறிவித்துள்ளது.

இலங்கை கல்வி அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் திறமை வாய்ந்த இலங்கை பிரஜைகளை தெரிவு செய்து இந்திய அரசாங்கம் புலமைப் பரிசில்களை வழங்கவுள்ளது.

இப்புலமைப்பரிசில் திட்டங்கள் முழுமையான கற்கைநெறி கட்டணம் மற்றும் கற்கைநெறிக் காலம் முழுவதற்குமான மாதாந்த செலவீன கொடுப்பனவுகள் அனைத்தையும் உள்ளடக்கியதுடன் தங்குமிட கொடுப்பனவு மற்றும் வருடாந்த உதவித்தொகையும் வழங்கப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பான மேலதிக தகவல்களை கல்வியமைச்சின் www.mohe.gov.lk. இணையதளத்தில் பார்வையிட முடியும்.

அத்துடன் வேறு தகவல்களை பெற்றுக்கொள்ள விரும்பும் விண்ணப்பதாரிகள் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தைதொடர்புகொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (E-mail- edu wing. colombo@ mea. gov. in / 0112421605, 0112 422788 ext-605). (4-5)

# கொவிட் தொற்றுக்குள்ளான தாய் 3 சிசுக்களை பிரசவித்தார்



(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருந்த கர்ப்பிணி தாயொருவர் மூன்று சிசுக்களை பிரசவித்துள்ளார் என கொழும்பு டி.சொய்சா பெண்கள் வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

தாயும் மூன்று சிசுக்களும் நலமாக உள்ளனர் என வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது. (4-5)

# லாப்ஸ் காஸ் சிலிண்டரின் விலையை அதிகரிக்க கோரிக்கை

(கொழும்பு)

கடந்த மாதமே விலை அதிகரிப்பு செய்யப்பட்ட நிலையில் தற்போது மீண்டும் விலை அதிகரிப்பை கோரியுள்ளது லாப்ஸ் காஸ் நிறுவனம்.

கடந்த மாதம் 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 363ரூபாவினால் அதிகரிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில் மீண்டும் 12.5 கிலோ கிராம் எடைகொண்ட காஸ் சிலிண்டரின் விலையை 291ரூபாவில் அதிகரிக்க வேண்டும் என லாப்ஸ் நிறுவனம் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (4-5)

# இலங்கையில் அத்தியாவசிய பொருட்களுக்கு பாரியளவு தட்டுப்பாடு நிலை உருவாகும்

## இந்திய பிரபல சஞ்சிகை சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் அத்தியாவசிய பொருட்களுக்கு பாரியளவு தட்டுப்பாடு ஏற்படும் நிலை உள்ளதென இந்தியாவின் பிரபல Frontline சஞ்சிகை தெரிவித்துள்ளது. கொவிட் தொற்றினால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் பிடியில் இலங்கைசிக்கியுள்ளதாக அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உணவு மாத்திரமின்றி மருந்து தட்டுப்பாடும் இலங்கையில் ஏற்பட்டுள்ளதாகவும் சீனி, அரிசி உட்பட பொருட்களை கொள்வனவு செய்வதற்காக மக்கள் கடைகளுக்கு முன்னால் வரிசைகளில் நிற்பதனை அவதானிக்க முடிவதாக குறிப்பிடப்படுகின்றது.

இலங்கையின் அனைத்து பொருட்களின் விலையும் அதிகரித்துள்ளதாகவும் சாதாரண மக்களால் அந்த நிலைமையை தாங்கிக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டு இருப்பு குறைந்து வருவதால் நாணய மாற்று விகிதங்கள் பலவீனமடைந்துள்ளதாகவும், இறக்குமதி மற்றும் கடன் தவணைகளை செலுத்த இலங்கை சிரமப்படுவதாகவும் மற்ற நாடுகளில் இருந்து உணவு மற்றும் மருந்து வாங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எரிசக்தி தேவைகளுக்காக எரிபொருள் மற்றும் எரிவாயுவை இறக்குமதி செய்வது எதிர்காலத்தில் நெருக்கடிக்கு வழிவகுக்கும் எனவும் இலங்கை அரசாங்கம் பொதுமக்களுக்கு எரிபொருளை கவனமாக பயன்படுத்த அறிவுறுத்தியுள்ளது எனவும் அந்த சஞ்சிகையில் கூறப்பட்டுள்ளது.(4-5)

# பிளாஸ்ரிக் பொருட்களுக்கு தடை; விரைவில் வர்த்தமானி அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அமுலுக்கு வரும் 7 வகையான பிளாஸ்டிக் பொருட்களுக்கான தடை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியாகவுள்ளது.

இந்த விடயத்தை இலங்கையின் சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவித்துள்ளார்.

சுற்றுச்சூழல் அமைச்சில் நேற்று முன்தினம் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போதே அமைச்சர் குறித்த விடயத்தை தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

குறித்த தடையை அமுல்படுத்தும் வகையிலான வர்த்தமானி அறிவிப்பை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சட்டமா அதிபரின் பரிந்துரை கிடைத்தவுடன் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என தெரிவித்தனர். (4-5)

## இருபது-20 உலகக் கிண்ணம்

# இந்திய அணி அறிவிப்பு

## டோனிக்கு புதிய பொறுப்பு



இருபது-20 உலகக் கிண்ணத் தொடருக்கான எதிர்பார்ப்பு மிக்க இந்தியக் கிரிக்கெட் அணி விபரம், அறிவிக்கப்பட்டுள்ளது.

விராட் கோலி தலைமையிலான இந்திய அணியில், ஷிகர் தவான், யுஸ்வேந்திர சாஹல், பிரித்வி ஷா ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.


அதேவேளை அணியின் முன்னாள் தலைவரான மகேந்திர சிங் டோனி, அணியின் வழிகாட்டியாக நியமிக்கப்பட்டுள்ளார். விராட் கோலி தலைமையிலான அணியில், ரோஹித் சர்மா, கே.எல். ராகுல், சூர்யகுமார் யாதவ், ரிஷப் பந்த், இஷான் கிஷன், ஹர்திக் பாண்ட்யா, ரவீந்திர ஜடேஜா, ராகுல் சாஹர், ரவிச்சந்திரன் அஷ்வின், அக்ஸர் பட்டேல், வருண் சக்கரவர்த்தி, ஜஸ்பிரிட் பும்ரா, புவனேஸ்வர் குமார், முகமது ஷமி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இவர்கள் தவிர மாற்று வீரர்களாக ஸ்ரேயாஸ் அய்யர், ஷர்துல் தாகூர், தீபக் சாஹர் ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

16 நாடுகள் பங்கேற்கும் இருபது-20 உலகக்கிண்ண தொடர், ஓமான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதிமுதல் நவம்பர் 14ஆம் திகதிவரை நடைபெறுகின்றது.

இந்தியக் கிரிக்கெட் அணி, தனது முதல் போட்டியில், பாகிஸ்தான் அணியை ஒக்டோபர் மாதம் 24ஆம் திகதி எதிர்கொள்கின்றது. (4)

# வடகொரியாவை தடை செய்தது சர்வதேச ஒலிம்பிக் குழு



டோக்கியோ 2020 ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் பங்குபற்றத் தவறியமைக்காக வட கொரியாவுக்கு சர்வதேச ஒலிம்பிக் குழுவினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை 2022 வரை நீடிப்பதால் பீஜிங்கில் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக்கில் வட கொரியாவுக்கு பங்குபற்ற முடியாது.

கொவிட் 19தொற்று நோயிலிருந்து தனது போட்டியாளர்களைப் பாதுகாக்க வேண்டியுள்ளதெனத் தெரிவித்து டோக்கியோ 2020 ஒலிம்பிக் விளையாட்டு விழாவுக்கு தனது குழுவினரை வடகொரியா அனுப்பவில்லை.

இந்தத் தடைக் காலத்தின் போது எவ்வித நிதி உதவியும் வட கொரியாவுக்கு கிடைக்காது என சர்வதேச ஒலிம்பிக் குழுத் தலைவர் தோமஸ் பெச் தெரிவித்தார்.

பீஜிங் 2022 குளிர்கால ஒலிம்பிக்கில் தனிப்பட்ட வட கொரியர்களின் பங்கேற்பு குறித்தும் வடகொரியாவுக்கு விதிக்கப்பட்ட தடைக் காலத்தை மறுபரிசீலனை செய்வது குறித்தும் தீர்மானிக்கும் உரிமை சர்வதேச ஒலிம்பிக் குழுவுக்கு இருப்பதாக தோமஸ் பெச் மேலும் தெரிவித்தார். (4)

# இந்திய-இங்கிலாந்து இறுதி டெஸ்ட் இன்று

14 ஆண்டுகளுக்கு பிறகு விராட் கோலி தலைமையிலான அணி இங்கிலாந்து மண்ணில் டெஸ்ட் தொடரை கைப்பற்றி புதிய சரித்திரம் படைக்கும் ஆர்வத்தில் உள்ளது. விராட் கோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 5 டெஸ்ட் தொடரில் நாட்டிங்காமில் நடந்த முதல் டெஸ்ட் சமநிலை ஆனது. லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற 2ஆவது டெஸ்டில் 151 ரன் வித்தியாசத்திலும், ஓவலில் நடந்த 4-வது டெஸ்டில் 157 ரன் வித்தியாசத்திலும் இந்தியா வெற்றிபெற்றது. லீட்சில் நடந்த 3ஆவது டெஸ்டில் இங்கிலாந்து இன்னிங்ஸ் மற்றும் 76 ரன் வித்தியாசத்தில் வென்றது. இதனால் இந்தியா 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோதும் 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் இன்று தொடங்குகிறது.

இந்த டெஸ்டிலும் வெற்றி பெற்று இந்தியா 3-1 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றுமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது. (4)

# நியூசிலாந்து அணிக்கெதிரான இருபது-20 முதல்முறையாக வென்றது பங்களாதேஷ்



நியூசிலாந்து அணிக்கெதிரான நான்காவது இருபது-20 போட்டியில், பங்களாதேஷ் அணி 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட இருபது- 20 தொடரை 3-1 என்ற கணக்கில் பங்களாதேஷ் அணி கைப்பற்றியுள்ளது. இதன்மூலம் நியூசிலாந்து அணிக்கெதிராக பங்களாதேஷ் அணி முதல் முறையாக இருபது-20 தொடரொன்றை வென்றுள்ளது.

டாக்கா மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி, 19.3 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 93 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, வில்யங் 46 ஓட்டங்களையும் டாம் லாதம் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில், நசும் அஹமட் மற்றும் முஷ்பிகூர் ரஹ்மான் ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளையும் மெயிடி ஹசன் மற்றும் சய்புதின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 94 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பங்களாதேஷ் அணி, 19.1 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

இதனால் பங்களாதேஷ் அணி 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மொஹமதுல்லா ஆட்டமிழக்காது 43 ஓட்டங்களையும் மொஹமட் நயீம் 29 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

நியூசிலாந்து அணியின் பந்துவீச்சில், அஜாஸ் பட்டேல் 2 விக்கெட்டுகளையும் கோல் மெக்கொன்ச்சி 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக 48 பந்துகளில் 2 சிக்ஸர்கள் 1பவுண்ரி அடங்களாக ஆட்டமிழக்காது 43 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட மொஹமதுல்லா தெரிவு செய்யப்பட்டார். (4)

# இராசிபலன்

**10.09.2021**
ஆவணி 25, வெள்ளிக்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 12.39 மணிவரை
சித்திரை பிற்பகல் 4.10 மணிவரை
சுபநேரம் 6.03-7.33 மணிவரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை
சந்திராஷ்டமம்: உத்தரட்டாதி, ரேவதி
விநாயகர் சதுர்த்தி விரதம்.

வளவன்



மேஷம்

நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், உடல் நலம் சீராகும், காரிய அனுகூலமுண்டு.




ரிஷபம்

தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் முன்னேற்றமுண்டு, குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், போசன சுகமுண்டு.



மிதுனம்

பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.



கடகம்

தேவைகள் பூர்த்தியாகும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.



சிம்மம்

சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.



கன்னி

சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு.



துலாம்

புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, வழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.



விருச்சிகம்

பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத்தவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.



தனுசு

தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள்.



மகரம்

செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும்.



கும்பம்

நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், உடல் நலம் சீராகும், வழிபாட்டால் சிறப்பினை காணும் நாள், பயணங்கள் செல்லும் சிந்தனை உருவாகும்.



மீனம்

காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தில் சிறு சிறு முரண்பாடுகள் தோன்றி மறையும், திடீர் பயண விரயங்கள் ஏற்படலாம்.

உன் வேலைகள் உனக்கு சமாதி கட்டிவிடாமல் பார்த்துக்கொள்

# நாட்டில் மீண்டுமொரு தாக்குதல் நடத்தப்படலாம்-பொதுபலசேனா எச்சரிக்கை

(கொழும்பு)

**உயிர்த்தஞாயிறு தாக்குதலைப்போல மீண்டுமொரு தாக்குதல் நாட்டில் நடத்தப்படலாம் என பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் நேற்று வியாழக்கிழமை விசேட கடிதமொன்றை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

சிவில் மற்றும் நபர்களின் ஊடாக பாதுகாப்பு பிரிவை அதைரியப்படுத்தும் வகையிலான முயற்சிகள் இடம்பெறுகின்றன. அதனூடாக தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தப்படுவதற்கான சூழ்ச்சி நாட்டிற்குள் இடம் பெறுகின்றதா என்ற சந்தேகம் இருப்பதாக அந்தக்கடிதத்தில் பொதுபலசேனா குறிப்பிட்டுள்ளது.

மேலும், மிகச்சிறிய பாதுகாப்பு விரிசலைப் பயன்படுத்தி அதனூடாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலைப் போன்ற ஒரு தாக்குதலை நடத்த அடிப்படைவாத அமைப்புகள் திட்டமிடுவது போன்ற பாரிய ஆபத்து நாட்டிற்கு முன்பாக இருக்கின்றது என்றும் ஞானசார தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனால் அடிப்படைவாத மற்றும் தீவிரவாத செயற்பாடுகளை முளையிலேயே கிள்ளியெறியத்தக்கதாக பாதுகாப்புக் கட்டமைப்பை மேலும் பலப்படுத்துவதற்கான அவசியத்தையும் அவர் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் நாட்டில் செயற்படு



கின்ற மேலும் சில அடிப்படைவாத மற்றும் இனவாத அமைப்புக்களை அரசாங்கம் தடை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-5)

# பிரதான அரிசி ஆலைகள் முற்றுகை சுமார் 1000 மெற்றிக் தொன் அரிசி மூடைகள் மீட்பு



(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டத்தில் உள்ள அரிசி ஆலை உரிமையாளர்களின் பெரிய அரிசி களஞ்சியசாலைகளை சோதனை செய்த அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தலைமையிலான குழுவினர், அந்த கிடங்குகளில் இருந்து சுமார் 1,000 மெற்றிக் தொன் அரிசியை கைப்பற்றியுள்ளனர்.

சதொச மற்றும் உணவுத் திணைக்களத்தைச் சேர்ந்த சுமார் 70 லொறிகள் பொலநறுவைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, கைப்பற்றப்பட்ட அரிசி கையிருப்பு, நேற்று மதியம் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டதாகவும் சதொச மூலம் விற்பனை செய்யவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளதாகவும் வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5)

# தொற்று உறுதிப்படுத்தப்பட்டால் 28 நாட்களின் பின்னரே தடுப்பூசி

## மருத்துவ நிபுணர் வாசன்

(கொழும்பு)

கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாத ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டதில் இருந்து 28 நாட்கள் முடிவடைந்த பின்னர் அல்லது அவர் முழுமையாகக் குணமடைந்து 14 நாட்கள் பூர்த்தியடைந்ததன் பின்னரே தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் மருத்துவ நிபுணர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

மேலும் நாடளாவிய ரீதியில் 20 வயதிற்கு மேற்பட்டோருக்கான கொரோனாத் தடுப்பூசி வழங்கல் பணிகள் ஆரம்பமாகியிருக்கும் நிலையில், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது குறித்து பல்வேறு சந்தேகங்கள் காணப்படுகின்றன.

மேலும் அவை குறித்துத் தெளிவுபடுத்துகையிலேயே மருத்துவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அண்மைக் காலத்தில் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதில் நாட்டு மக்கள் அதிக நாட்டம் காண்பித்து வருகின்றார்கள்.

மேலும் முதலாம் கட்டத் தடுப் பூசியைப் பெற்றுக்கொண்ட ஒருவருக்கு இரண்டாம் கட்டத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்குரிய காலப்பகுதியில் கொரோனாத் தொற்று ஏற்படும் பட்சத்திலும் மேற்குறிப்பிட்ட காலஅளவின் அடிப்படையிலேயே இரண்டாம் கட்டத் தடுப்பூசியைப் பெறவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று அறிகுறிகள் காணப்படும் பட்சத்தில், பரிசோதனை மூலம் தொற்று ஏற்பட்டிருக்கின்றதா? இல்லையா? என்பதை உறுதிப்படுத்திக்கொள்வது அவசியமாகும்.

அவ்வாறு உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் மேற்கூறப்பட்டவாறான காலஅளவுகளின் அடிப்படையில் தடுப்பூசியைப் பெறமுடியும் என்று தெரிவித்தார். (நி-5)

# தற்போதைய அரசாங்கத்தில் பிரிவினையின்றி அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன

## நாமல் ராஜபக்ஷ

**(யாழ்ப்பாணம்)**

**தெற்கில் தெய்வேந்திர முனையிலிருந்து வடக்கில் பருத்தித்துறை முனை வரை இந்த அரசாங்கத்தினால் அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.**



நேற்றைய தினம் யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்களை மேற்பார்வை செய்வதற்காக மேற்கொண்ட விஜயத்தின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கமானது வடக்கு கிழக்கு தெற்கு என்று பார்க்காது அனைத்து மக்களுக்கும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கு பகுதிகளில் அதிக அளவிலான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொரோனா வைரஸ் என்ற ஒரு பிரச்சினை காணப்படினும் அந்த கொரோனா வைரஸ் என்ற தடையையும் தாண்டி அதனை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டத்தோடு அபிவிருத்தியினையும் அரசாங்கம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது.

அத்தோடு அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரித்ததாக தற்போது ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது எனினும் தற்போது நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையில் இந்த அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு அதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும் நீங்கள் ஒரு கேள்வியைக் கேட்டுள்ளீர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக தற்போது சட்டம் ஒழுங்கு நிலை நாட்டுவதற்கு பொலிஸார் தயாராக உள்ளார்கள் எந்த ஒரு இடத்திலும் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றால் அது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ததன் மூலம் குறித்த வன்முறைச் சம்பவங்களோடு தொடர்பானவர்களை கைது செய்து கொள்ள முடியுமெனவும் தெரிவித்தார். (7-4-33)



யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி பள்ளிவாசல் நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து யாழ். மாவட்டத்தின் 19 நலன்புரி முகாம்களில் வாழும் மக்களுக்கு வழங்கவென 190 ரூபாய் பெறுமதியான 1000 சமைத்த உணவுப் பொதிகள் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனிடம் கையளிக்கப்பட்டது.
(படம் : ரவிசாந்)

# நல்லைக்குமரன் மலர் வெளியீடு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி மிகுந்த சூழ்நிலையில் இவ்வாண்டிற்கான நல்லைக்குமரன் மலர் வெளியீடு மற்றும் யாழ் விருது வழங்கல் ஆனது பொது முடக்கம் முழுமையாக நீக்கப்பட்டு கொவிட் தொற்று நிலை தணிந்து சுகாதார நடைமுறைகளின் படி ஆகக்குறைந்த பங்குபற்றுநர்களுடன் ஒன்றுகூடல்களை நடத்தும் நிலை ஏற்படும் போதே நடத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. வருட இறுதி வரை அவ்வாறானதொரு சூழகமான சூழ்நிலை ஏற்படாத விடத்து வருட இறுதிக்குள் இவ்வாண்டிற்கான மலர் வெளியீட்டையும் கௌரவிப்பு நிகழ்வினையும் zoom செயலிமூலமாகவும் தொலைக்காட்சி நேரலையூடாகவும் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக குறைந்த பட்ச பங்குபற்றுநர்களுடன் நடத்துவது எனவும் மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (7-4)

# பொலிஸார் போல் பாசாங்கு செய்து பணம் கொள்ளை

(தர்மபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் கட்டைக்காடு பகுதியில் நேற்றைய தினம் காலை மோட்டார் சைக்கிளில் பயணித்தவரிடம் பொலிஸார் போல் முகக்கவசம் அணிந்து வந்த இருவர் பொலிஸ் பாணியில் அவரது உடலை சோதனை செய்து வீதி அனுமதிப்பத்திரம் உள்ளதா தலைக்கவசம் அணியவில்லை மற்றும் மோட்டார் சைக்கிளுக்கான இலக்கத்தகடு இல்லை எனவே நீங்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு வரவேண்டும் எனக் கூறியுள்ளனர். மேலும் அவரின் அனுமதி இல்லாமல் அவரின் பணப்பையை எடுத்ததுடன் தேசிய அடையாள அட்டையை அவரிடம் ஒப்படைத்து இதன் நிழல் பிரதிஎடுத்துக்கொண்டு பொலிஸ் நிலையத்துக்கு வரவும் என்று கூறிவிட்டு அவ்விடத்திலிருந்து சென்றுவிட்டனர்.

மோட்டார் சைக்கிள் உரிமையாளர் வீட்டுக்குச்சென்று தலைக்கவசத்தை அணிந்து கொண்டு தேசிய அடையாள அட்டையின் நகல் பிரதியை பெற்றுக்கொண்டு தருமபுர பொலிஸ் நிலையத்திற்கு சென்றுள்ளார். நடந்த விடயத்தினை கூறியபொழுது தருமபுர பொலிஸ் நிலையத்தில் இருந்து ஒருவரும் வெளியில் செல்லஇல்லை எனவும் சிவில் உடையில் வீதிபரிசோதனை செய்வதில்லை எனவும் தெரிவித்தனர். சம்பந்தப்பட்டவர் தமது பொலிஸ் பிரிவான கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பாக முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார். (7-4-316)



சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரியின் வேண்டுகோளுக்கு இணங்க நேற்று முன்தினம் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் 24000 ரூபாய் பெறுமதியான எட்டு பல்ஸ் ஒக்ஸிமீற்றர் கருவிகள் வழங்கி வைக்கப்பட்டன.
(படம்: சுபேஷன்)

# கரவெட்டியில் நாளை தடுப்பூசி



(கரணவாய்)

கரவெட்டிப் பிரதேச மக்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு பிற்போடப்பட்டமையினை அடுத்து 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான 1ஆம் மற்றும் 2 ஆம் தடுப்பூசி ஏற்றும் நிகழ்வுகள் மீண்டும் நாளை சனிக்கிழமை காலை 8.30 முதல் மாலை 3.30 வரை நடைபெறும் என கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (7-4-60)

# ஆசிரிய கலாசாலை கற்கை நெறி நிறைவு கல்வி அமைச்சு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய கலாசாலைகளில் 2019/- 2020 கல்வியாண்டுக்குரிய கற்கை நெறியை 08.09.2021 நிறைவு செய்து அவர்களை 09.09.2021 தொடக்கம் பாடசாலைகளுக்கு அனுப்புமாறு இசுருபாய கல்வி அமைச்சின் செயலாளர் ஆசிரிய கலாசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஆசிரிய மாணவர்களுக்கென பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படவிருந்த இறுதிப் பரீட்சைகள் கொவிட் நிலைமையால் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாலேயே கல்வி அமைச்சு இந்த முடிவை எடுத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இருந்து 376 ஆசிரிய மாணவர்கள் கற்கை நெறியை நிறைவு செய்திருப்பதாகவும் இவர்களுக்குரிய கற்கை நெறி பெரும்பாலும் இணைய வழியில் கல்வி அமைச்சின் எல்.எம்.எஸ் (e-thaksalawa - LMS) தளத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டதாகவும் கலாசாலை அதிபர் வீ. கருணலிங்கம் தெரிவித்தார். (7-4)

# நல்லிணக்க முயற்சிகளுக்கு எப்போதும் அமெரிக்கா ஆதரவு வழங்கும்

## இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை அமெரிக்கா வழங்கும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் கூறியுள்ளார்.**



மனித உரிமை பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டியது மிகவும் அவசியமானது என குறிப்பிட்ட அவர், அனைவரும் மனித உரிமைகளை மதித்துச் செயற்பட வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

ஜனநாயக அரசாங்கமொன்று அந்நாட்டின் அனைத்து மக்களுக்கும் பொறுப்புக்கூற வேண்டும் என்பதே அமெரிக்காவின் நிலைப்பாடு என்பதனால் கடந்த கால மற்றும் நிகழ்காலத்தில் உள்ள மனித உரிமைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டு அதற்கு நியாயம் வழங்கப்பட வேண்டும்.

மேலும் நல்லிணக்க முயற்சிகள், நிலைபேறுகால நீதிப் பொறிமுறையையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதில் அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அத்தோடு பொருளாதார ரீதியில் வெற்றியளிக்கக்கூடிய கொள்கைகளை வகுப்பது குறித்து இலங்கை அரசாங்கம் முனைப்புக் காட்ட வேண்டும் என்றும் அலைனா வலியுறுத்தினார். (நி-5)

# 7ஆம் ஆண்டு நினைவலைகள்

**அமரர். திருமதி. கண்ணகாதேவி உருத்திரசுந்தரம்**

அன்னை மடியில்
02.03.1946
இறைவன் அடியில்
29.08.2014

திதி:
ஆவணி சதுர்த்தி



ஆண்டுகள் ஏழு என்ன
அன்பான நின் நினைவுகள்
ஈரேழு ஜென்மம் சென்றாலும்
ஈரமான தொரு சுருவாக
நிறைந்தே இருக்கும் அம்மா!

(7964)

ஏலம் வீதி,
கைதடி மேற்கு,
கைதடி.

திரு.கா.உருத்திரசுந்தரம்
(ஓய்வுநிலை சாலை முகாமையாளர், இ.போ.ச., காரைநகர்),
குடும்பத்தினர்.

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

## விரதங்கள்

### துன்பங்களைப் போக்கும் புரட்டாதி சனிக்கிழமை



**பலன் தரும் வார விரதங்கள்**

ஞாயிற்றுக்கிழமை சூரியனுக்கு உகந்தது. சூரிய நமஸ்காரம் செய்யலாம். ஆதித்யஹ்ருதய ஸ்தோத்திரம் சொல்லலாம். சர்க்கரை பொங்கல் நைவேத்தியம் செய்து சூரியனுக்கு படைக்கலாம். பகலில் ஒரு வேளை உணவருந்தலாம். இரவில் பால், பழம் சாப்பிடலாம்.

திங்கட்கிழமை விரதம் சோம வார விரதம் ஆகும். சிவபெருமானுக்கு உகந்த இந்த விரதத்தை கார்த்திகை மாதம் முதல் சோம வாரத்தில் அனுஷ்டிக்க வேண்டும். பகலில் தூங்கக்கூடாது. ஒரு அந்தணரையும், அவர் மனைவியையும் சிவனாகவும், பார்வதியாகவும் பாவித்து பூஜை செய்து, தான தர்மங்கள் செய்ய வேண்டும். சிவாலயங்களுக்கு சென்று தரிசனம் செய்ய வேண்டும்.

செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் செவ்வாய்க் கிழமை அங்காரகனை வேண்டி விரதம் இருக்க நல்ல பலன் கிடைக்கும்.

புதன்கிழமை விரதம் புகழைக் கொடுக்கும். புதனுக்குரிய தெய்வம் விஷ்ணு. அன்றைய தினம் விஷ்ணு சகஸ்ரநாமம் படித்து விரதம் இருந்தால் கல்வி, ஞானம் பெருகும்.

குரு பகவானுக்குரிய நாள் வியாழக்கிழமை. அந்தநாளில் விரதம் இருந்தால் எல்லா காரியங்களும் கைகூடும். குரு பகவானின் தோற்றமான தட்சிணாமூர்த்திக்கு கொண்டைக்கடலை மாலை, வஸ்திரம், மஞ்சள், புஷ்பம் சாற்றி வழிபட வேண்டும்.

வெள்ளிக்கிழமை விரதம் சுக்கிரனுக்கும், அம்பாளுக்கும் உரியது. வெள்ளிக்கிழமையன்று சுக்கிரனுக்கு விரதம் இருந்தால் சுபீட்சமான வாழ்வு உண்டாகும். கடன் தொல்லை நீங்கும்.

சனிக்கிழமை அன்று வேங்கடவனை வழிபட்டால் எல்லா வித சிறப்பும் வந்தடையும்.

(தொடரும்)

# தடுப்பூசி செலுத்தியவர்களுக்கும் டெல்டா திரிபால் ஆபத்து

(கொழும்பு)

உலகம் முழுவதும் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்திவரும் அதிவீரியம் மிக்க பரவல் தன்மையுடைய டெல்டா வைரஸ் திரிபானது, இரு தடுப்பூசிகளையும் செலுத்திக் கொண்டவர்களுக்கும் தொற்றக்கூடிய தன்மையுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. டெல்டா திரிபு நோய் எதிர்ப்பு கட்டமைப்பை கடந்து செல்லக்கூடிய ஆற்றல் உள்ளதாக ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூலக்கூறு ஆய்வறிக்கையை சுட்டிக்காட்டி உயிரியல் துறை பிரிவின் பேராசிரியர் சந்திம ஜீவந்தர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரபல சஞ்சிகை வெளியிட்டுள்ள ஆய்வு முடிவொன்றில் டெல்டா திரிபானது முழுமையாக தடுப்பூசிகளை செலுத்திக்கொண்டவர்களுக்கும் தொற்றக் கூடிய நிலையுள்ளதாக, சர்வதேச விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் டெல்டா திரிபானது, மனிதர்களின் நோய் எதிர்ப்பு கட்டமைப்பையும் கடந்து செல்லக்கூடியது என அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியே பேராசிரியர் சந்திம ஜீவந்தர மேற்படி தெரிவித்துள்ளார். (நி-5)

# ஹெரோயின் விவகாரம்; பொப் மார்லி கைது

(கொழும்பு)

290 கோடி ரூபாய் பெறுமதியான ஹெரோயின் கடத்தல் விவகாரத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான பொப் மார்லி எல்பிட்டிய பகுதியில் வைத்து பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்தமாத இறுதியில் முன்னெடுத்த விசேட நடவடிக்கையின் போது படகொன்றிலிருந்து 288 கிலோ 644 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

இவற்றின் பெறுமதி 290 கோடி ரூபாவுக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டதுடன், கடத்தலில் ஈடுபட்ட ஐவரும் கைது செய்யப்பட்டனர். கைதான சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இந்த போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டார்.

41 வயதான “ பொப் மார்லி ” என அறியப்படும் களுத்துறை சமிந்த தாப்றூ என்பவரே இந்த விவகாரத்தில் உள்ள உள்நாட்டு பிரதான சந்தேக நபர் என பொலிஸ் தலைமையகம் கண்டறிந்து அவரை கைது செய்தது. (4-5)

# திருத்தம்

யாழ்ப்பாணம் மாநகர சபை, யாழ்ப்பாணம் நவீன சந்தையின் மேற்றளத்தின் நிலப்பகுதிகளை நீண்டகால குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்காக 09.09.2021ம் திகதி பிரசுரிக்கப்பட்ட விலை மனுக்கோரல் விளம்பரத்தின் 04ம் பந்தியில் **விண்ணப்பங்கள் வழங்கப்படும் காலப்பகுதி 2021.09.10ம் திகதி தொடக்கம் 2021.09.30ம் திகதி வரை** என மாற்றம் செய்து வாசிக்கவும்.

தலைவர், பெறுகைக்குழு,
**2021.09.10** (இ) யாழ்ப்பாணம் மாநகரசபை.

# ஆப்கானிஸ்தானிற்கு அவசர மனிதாபிமான உதவிகளை வழங்க முன்வந்தது சீனா

**(காபூல்)**

**ஆப்கானிஸ்தானுக்கு 3 மில்லியன் டோஸ் கொவிட்-19 தடுப்பூசிகளையும், 200 மில்லியன் யுவான் (31 மில்லியன் அமெரிக் டொலர்) மதிப்புள்ள அவசர மனிதாபிமான உதவிகளையும் வழங்குவதாக சீனா உறுதியளித்துள்ளது.**




ஆப்கானிஸ்தான் எதிர்கொள்ளும் புதிய சவால்கள் குறித்து ஆப்கானிஸ்தானை அண்மித்துள்ள ஏனைய நாட்டு வெளியுறவு அமைச்சர்களுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி இதனை அறிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானின் அனைத்து அண்டை நாடுகளும் கொவிட்-19 தொற்றுநோய் தடுப்பை வலுப்படுத்த ஆப்கானிஸ்தானுக்கு உதவுதல், எல்லை துறைமுகங்களை திறந்து வைப்பது, அகதிகள் மீதான மேலாண்மை மற்றும் கட்டுப்பாட்டை வலுப்படுத்துதல், மனிதாபிமான உதவிகளை வழங்குதல் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைக்க வேண்டும் என்றும் வாங் யி வலியுறுத்தினார்.

அதேநேரம் பயங்கரவாதிகளைக் கட்டுப்படுத்தவும் இல்லாதொழிக்கவும் தலிபான்கள் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ஆப்கானிஸ்தானில் பிரச்சினைகளை உருவாக்கியவர்கள் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள் என்பதால் ஆப்கானிஸ்தான் மக்களுக்கு பொருளாதார மற்றும் மனிதாபிமான உதவிகளை வழங்க அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சீன வெளியுறவு அமைச்சர் வலியுறுத்தினார். (7-4)

# தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட கனடா பிரதமரின் மீது கல்வீச்சு

(ஒட்டாவா)

கனடாவில் பாராளுமன்ற தேர்தலுக்கு இன்னும் 2 ஆண்டுகள் உள்ள நிலையில் முன்கூட்டியே தேர்தல் நடத்தப்படும் என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கடந்த மாதம் அறிவித்தார். அதன்படி வருகிற 20 ஆம் திகதி அங்கு பாராளுமன்ற தேர்தல் நடைபெற உள்ளது.



இதையொட்டி பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நாடு முழுவதும் பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்.

கடந்த வாரம் ஒண்டாரியோ மாகாணத்தில் ஜஸ்டின் ட்ரூடோ பிரசாரம் செய்ய திட்டமிட்டிருந்த நிலையில், பிரசாரம் நடைபெற இருந்த இடத்தில் போராட்டக்காரர்கள் திரண்டு அவருக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதைத்தொடர்ந்து ஜஸ்டின் ட்ரூடோ தனது பிரசாரத்தை ரத்து செய்து விட்டு திரும்பிச் சென்றார்.

இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஒண்டாரியோ மாகாணத்தில் உள்ள லண்டன் நகரில் பிரசாரத்தை முடித்துவிட்டு தனது வாகனில் ஏறிய போது அங்கு திரண்டிருந்த போராட்டக்காரர்கள் கற்களையும், குப்பைகளையும் அவர் மீது வீசினர். அதில் சில கற்கள் ஜஸ்டின் ட்ரூடோவின் தோள்பட்டையில் விழுந்தன.

இதைத் தொடர்ந்து அவரது பாதுகாவலர்கள் அவரை பத்திரமாக வாகனில் ஏற்றி அங்கிருந்து அழைத்து சென்றனர். எனினும் இந்தக்கல்வீச்சில் அவருக்கு பெரிய அளவில் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-4)

# அஸ்ட்ராஜெனேகா தடுப்பூசியால் நரம்பு கோளாறு ஏற்பட வாய்ப்பு

## ஐரோப்பிய மருந்து கட்டுப்பாட்டு கழகம்

(லக்சம்பேர்க்)

கொரோனா வைரஸை கட்டுப்படுத்த உலக வாழ் மக்கள் எல்லோரும் தடுப்பூசி செலுத்தும் முயற்சியில் தீவிரமாக இறங்கி கொண்டிருக்கின்றனர்.

இந்தவேளையில் ஐரோப்பிய மருந்து கட்டுப்பாட்டு கழகம் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிசெலுத்திக் கொண்டவர்களுக்கு மிகவும் அரிதாக நரம்பு கோளாறு ஏற்பட வாய்ப்பிருப்பதாக தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலை 31 ஆம் திகதி வரை உலகம் முழுவதும் 59.2 கோடி தடுப்பூசி டோஸ்கள் செலுத்தப்பட்டதில், 833 பேருக்கு மட்டுமே இத்தகைய நரம்பு கோளாறு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இது 'கில்லைன்-பார்ஸ் சிண்ட்ரோம்' என்று அழைக்கப்படும் அரிய வகை நோய் பாதிப்பானது நோய் எதிர்ப்பு சக்தியால் நரம்பு மண்டலம் பாதிக்கப்படுவதைக் குறிக்கிறது. தடுப்பூசியால் ஏற்படும் இந்த பாதிப்பு 'வாக்ஸ்செர்வியா' என்று அழைக்கப்படுகிறது.

இருப்பினும் மிகவும் குறைவான எண்ணிக்கையிலேயே இந்த பாதிப்பு பதிவாகி இருப்பதாக கூறப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (7-4)

# ஐடா சூறாவளியால் பலியானோர் 82 ஆக உயர்வு

(நியூயோர்க்)

அமெரிக்காவின் பல மாகாணங்களை கடந்த வாரம் ஐடா சூறாவளி புயல் புரட்டி எடுத்தது. லூசியானா, நியூயோர்க், நியூ ஜெர்சி, நியூ ஆர்லென்ஸ் உள்ளிட்ட பல்வேறு மாகாணங்களில் புயல் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது.

இந்நிலையில், ஐடா புயலால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 82 ஆக அதிகரித்துள்ளது. புயலால் ஏற்பட்ட வெள்ளம், மின் தடை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்த உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளது. புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. (7-4)

# அசாமில் படகு விபத்து 50 இற்கும் மேற்பட்டோர் மாயம்

(திஸ்பூர்)

அசாமின், ஜோர்ஹட் மாவட்டத்தில் உள்ள நிமதிகாட் பகுதியில் இருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் நேற்று முன்தினம் மாலை 4.00 மணியளவில் பெரிய கப்பலும், சிறிய தனியார் படகொன்றும் நேருக்கு நேர் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால் சுமார் 70 பயணிகளை ஏற்றிச் சென்ற சிறிய படகு உடனடியாக கவிழ்ந்துள்ளதுடன், விபத்தின்போது இரண்டு படகுகளிலும் 100 க்கும் மேற்பட்ட பயணிகள் இருந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் அசாம் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் (ASDMA) தலைமை நிர்வாக அதிகாரி ஜிடி திரிபாதி கூறுகையில்,

சம்பவம் நடந்த ஆறு மணி நேரத்திற்குப் பிறகு கவிழ்ந்த படகில் இருந்த 43 பயணிகளை எங்களால் காப்பாற்ற முடிந்தது. மீட்கப்பட்டவர்களில் ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்து விட்டார். விபத்தினால் அதிகளவானோர் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என்றும் 50 இற்கும் மேற்பட்டோர் காணாமல் போன தாகவும் ஆரம்ப கட்ட அறிக்கைகள் மதிப்பிட்டிருந்தன. (7-4)

# கொரோனா சிகிச்சை விடுதியில் தீ விபத்து; 10 பேர் பலி

(ஸ்கோப்ஜே)

வடக்கு மாசிடோனியாவில் கொரோனா தொற்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவமனை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 10 பேர் பலியாகி உள்ளனர்.

இந்தத் தீவிபத்தில் பலர் மோசமாகக் காயமடைந்துள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என வடக்கு மாசிடோனியா சுகாதார அமைச்சர் வெங்கோ பிலிபஸ் எச்சரித்துள்ளார்.

இதேவேளை, காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு தலைநகர் ஸ்கோப்ஜேயில் உள்ள மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப்பட்ட ஒட்சிசன் சிலிண்டர் வெடித்து இந்தத் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களை பராமரிப்பதற்காக கடந்த ஆண்டு இந்த வைத்தியசாலை தற்காலிகமாக அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (7-4)

# பிரித்தானியா புறப்பட்ட 56 அகதிகள் மீட்பு

(பாரிஸ்)

பிரான்ஸிலிருந்து ஆங்கில கால்வாய் ஊடாக பிரித்தானியா நோக்கி, பயணிக்க முயன்ற 56 அகதிகள் மீட்கப்பட்டுள்ளனர்.

கலைஸ், டன்கெர்க், பவுலோன் சுர் மெர் நகர கடற்பிராந்தியங்களில் ஒரே நாளில் நான்கு மீட்புப் பணிகளின் போது அவர்கள் மீட்கப்பட்டனர். மீட்கப்பட்டவர்களில் ஆறு சிறுவர்களும் நான்கு பெண்களும் அடங்குவர்.

சிறிய ஆபத்தான மீன்பிடி படகுகள் மூலம் குறித்த அகதிகள் பிரித்தானியா நோக்கி சென்ற போது கடற்பிராந்திய காவல்துறையினரால் இவர்கள் மீட்கப்பட்டனர்.

அண்மைய நாட்களில் பிரித்தானியா நோக்கி சட்டவிரோத பயணம் மேற்கொள் பவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்வடைந்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் 21 ஆம் திகதி ஒரே நாளில் 828 பேர் கடல் மார்க்கமாக பிரித்தானியா நோக்கி படையெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7-4)

## கொரோனா அச்சம்

# தனியார் வைத்தியசாலைகளில் நிரம்பி வழியும் மக்கள் கூட்டம்

(நெளுக்குளம்)

**வவுனியாவில் கொரோனா அச்சம் காரணமாக தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவதற்காக அதிகமான மக்கள் நிரம்பிவழியும் சூழல் ஏற்பட்டுள்ளது.**

வவுனியா மாவட்டத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்வதுடன், உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்றது.

இந்நிலையில் நகரப்புறங்களில் அதிகமான பொதுமக்களிற்கு காய்ச்சல், தடிமல் போன்ற உபாதைகள் ஏற்பட்டு வருவதால் பொதுமக்கள் தனியார் வைத்தியசாலைகளிற்கு சென்று சிகிச்சைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறிப்பாக வவுனியா பொது வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு சென்றால் பிசிஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு தனிமைப்படுத்தப்படுவார்கள் என்ற அச்சத்தில் தனியார் வைத்தியசாலைகளிற்கு சென்று தமக்கான சிகிச்சைகளை முன்னெடுத்துவருகின்றனர். (7-4-299)

## வனப்பகுதி என அடையாளப்படுத்தி

# பிரமந்தனாறு விவசாயக் காணிகளுக்கு எல்லையிட்டது வனவளத்திணைக்களம்



(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு குளத்தின் நீரேந்து பகுதிகள் மற்றும் குளத்தின் கீழ் நீண்டகாலமாக பயிர்ச் செய்கை மேற்கொண்டு வந்த விவசாய காணிகள் வனவளத் திணைக்களத்தினால் எல்லையிடப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு குளத்தினூடாக 602 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் பெரும்போக மற்றும் சிறுபோக பயிர்ச் செய்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் முதல் வனவளத் திணைக்களத்தினால் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமான குளத்தின் நீரேந்து பிரதேசங்கள் மற்றும் குளத்தின் கீழான பொது மக்களின் வயற்காணிகள் குளத்தின் வான்பகுதி என்பன வனப்பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டு எல்லைகள் இடப்பட்டுள்ளன. (7-4-315-316)

# குடிநீர் பெறுவதில் சிரமப்படும் மக்கள் நிரந்தர தீர்வு தரக் கோரிக்கை

(தருமபுரம்)



கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை ஆளுகைக்குட்பட்ட கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்டகல்லாறு பகுதியில் 230க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் அவர்களுக்கான குடிநீர் அயல்கிராமமான பிரமந்தனாறு பகுதியில் இருந்தே குழாய் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

தொடர்ச்சியாக உரிய நேரத்தில் நாளாந்தம் தண்ணீரைப் பெறமுடியாது உள்ளதுடன் ஒரு நாள் முழுவதும் தண்ணீருக்காகச் செலவிட வேண்டியுள்ளதுடன் வாரத்தில் இரு தடவைகளே தமக்கு குடிநீர் கிடைக்கப்பெறுகிறது எனவும் கிராமமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இப்பகுதிகளில் குழாய் மூலம் வழங்கப்படுகின்ற குடிநீர் சில சமயங்களில் வராது விடுவதும் உண்டு. அப்போது எமது கிணற்றில் உள்ள பயன்படுத்த முடியாத குடிநீரை குடிக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே உரிய அதிகாரிகள் தண்ணீர் பிரச்சினையை நிரந்தரமாக தீர்த்து வைக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். (7-4-316)

## மன்னாரில்

# இன்று முதல் 20 வயதிற்கு மேற்பட்டோருக்கும் தடுப்பூசி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் 20 வயதிற்கு மேற்பட்ட சகலருக்கும் சினோபார்ம் தடுப்புசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கொரோனா தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் வகையில் மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக தடுப்புசிகள் வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

ஏற்கனவே 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்புசி செலுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் தொடக்கம் மன்னார் மாவட்டத்தில் 20 வயதிற்கு மேற்பட்ட சகலருக்கும் கொரோனாத் தடுப்புசி செலுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

அந்தவகையில் இன்று வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்டத்தில் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி, நானாட்டான் டிலாசால் பாடசாலை, மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், மறிச்சிக்கட்டி அல் ஜெசிரா பாடசாலை மற்றும் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஆகியவற்றில் சினோபார்ம் தடுப்புசி 20 வயதிற்கு மேற்பட்ட சகலருக்கும் முதலாவது ஊசி வழங்கப்படவுள்ளது.

மேலும் ஏற்கனவே 30 வயதிற்கு மேற்பட்டவர்களில் முதலாவது சினோபார்ம் தடுப்பூசியை பெற்றுக் கொண்ட வர்களுக்கும் 2ஆவது சினோபார்ம் தடுப்புசியும் வழங்கப்படவுள்ளது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரிவினோதன் தலைமையில் பொது சுகாதார வைத்திய அதிகாரிகள், தொற்று நோய் விஞ்ஞான பிரிவிற்கான வைத்திய அதிகாரி, வைத்தியசாலை பணியாளர்கள் மற்றும் இராணுவத்தின் உதவியுடன் தடுப்புசி வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(7-4-285)

# மன்னாரில் இதுவரை 1849 தொற்றாளர் அடையாளம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மேலும் புதிதாக 26 கொரோனா தொற்றாளர்கள்




அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் கடந்த 8 நாட்களில் மன்னார் மாவட்டத்தில் 165 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரிவினோதன் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை காலை வெளியிடப்பட்ட கொரோனா தொற்று நிலவர அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இவ் வருடம் மன்னார் மாவட்டத்தில் 1832 தொற்றாளர்களும், தற்போது வரை மாவட்டத்தில் மொத்தமாக 1849 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 22 கொரோனாத் தொற்று மரணம் நிகழ்ந்துள்ளது என குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (7-4-285)



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு உழவு இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை அக்கராயன் கமநல சேவைகள் திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தர் பார்த்தீபன் இந்த உழவு இயந்திரத்தை அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார். (படம்: கிருஷ்ணகுமார்)

# முல்லைத்தீவு துணுக்காய் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் 46 குளங்கள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் பயன்படுத்தப்படாத நிலையிலும் கைவிடப்பட்ட நிலையிலும் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலும் 46 குளங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைவிடப்பட்ட குளங்களை விடுவித்து அதன் கீழான காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் தற்போது 16 வரையான குளங்கள் பாவனையில் காணப்படுவதுடன் இவ்வாண்டில் 154 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடை செய்யப்பட்டுள்ளதுடன் அடுத்த பெரும் போகத்திற்கான தயார்படுத்தலில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (7-4-315)

# நிலைமை மீண்டும் மோசமாகலாம் ஒரு சிலரின் தவறினால்

## பெருமளவான மக்களுக்கு பாதிப்பு

### பொறுப்புடன் நடந்து கொள்ளுங்கள்—ரம்புக்வெல

**(கொழும்பு)**

**மீண்டும் எந்த நேரத்திலும் மோசமான கொரோனாத் தாக்கம் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன. எனவே மக்கள் பொறுப்புடன் செயற்பட்டால் மாத்திரமே சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஊடகங்களிடம் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பயணக்கட்டுப்பாடு பிறப்பிக்கப்பட்ட காரணத்தால் கடந்த காலத்தை விடவும் குறிப்பிட்ட அளவு ஆரோக்கியமான பெறுபேறுகள் கிடைத்துள்ளன. புதிய வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் மக்களின் செயற்பாடுகளில் முழுமையான திருப்தி இல்லை. இலக்கை நோக்கி எம்மால் பயணிக்க முடிந்த போதிலும் இலக்கைத் தக்கவைக்க முடியவில்லை. அதற்கு மக்களின் செயற்பாடுகளே காரணமாகும்.

மக்கள் பொறுப்புடன் செயற்பட்டால் மாத்திரமே எம்மால் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

சுகாதார அமைச்சு, சுகாதாரப் பணியகம் மூலமாக பல்வேறு சுகாதார வழிகாட்டிகள், கட்டுப்பாட்டு வழிமுறைகள் பிறப்பிக்கப் பட்ட போதிலும் மக்கள் அதனை முழுமையாகப் பின்பற்றுவதில் சந்தேகம் உள்ளது. ஒரு சிறிய குழு தவறு செய்கின்றது. இதனால் பெருமளவிலான மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்பதை சகலரும் கவனத்தில்கொள்ள வேண்டும். இப்போது நிலைமை கட்டுப்பாட்டில் உள்ளது.



ஆனால், எப்போதும் மீண்டும் மோசமான கொரோனாத்தாக்கம் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன. கண்ணுக்குத் தெரியாத ஒரு எதிரியுடன் போராடுகின்றோம் என்பதை சகலரும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி-5)

# விதிமுறையை மீறுபவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை

### சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்சரிக்கை



(கொழும்பு)

சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாதவர்கள் கைதுசெய்யப்பட்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமூக இடைவெளி மற்றும் முறையான சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாத மக்களுக்கிடையே கொரோனாத் தொற்று நோய் பரவுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

எனவே, சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாதவர்கள் கைது செய்யப்படுவார்கள்.

அத்துடன் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என அவர் தெரிவித்தார். (நி-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2400

**லக்சி**

"டா" போடும் பெண்கள் அனைவரும் ஆண்களையே "உ" போட கிச்சினுக்குள் அனுப்புகின்றனர்...



இன்றைய "டா" நாளைய "டீ" இதுவே காலப்போக்கில் டாடி என குழந்தைகளால் அன்போடு அழைக்கப்படுகிறது...

**ஜெனோ**

ஐயா மூன்று மாதமா என் பொண்டாட்டி என் கூட பேசுறது இல்லை. அதனால் எனக்கு டைவர்ஸ் கொடுங்க....



ஒன்றுக்கு இரண்டு தரம் யோசிச்சுக்கோ...
இது மாதிரி பொண்டாட்டி கிடைக்கிறது அபூர்வம்...

**நாதிகா**

முட்டை வியாபாரி:-என் மகன் எப்படிப் படிக்கிறான் சேர்....?
ஆசிரியர்:-நீங்க விற்கிறீங்க... அவன் வாங்குறான்....




**அபிசன்**

உள்ளே வரும்போது 20 KMH Speed ல வருது...



வெளியே போகும்போது 220 KMH Speed ல போகுது...

**முஷான்**

அம்மா அம்மா என்னம்மா பண்றீங்க.....



இல்லடா ஓடாம தானே கிடக்கு அதான் உடுப்பு காய போடுவோம் என்டு...

**பவி**



மற்ற key யை எல்லாம் லேசா தானே தொடுறீங்க...
என்ன மட்டும் ஏன்டா மொத்துனு மொத்துறீங்க...




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி; அரச வைத்திய அதிகாரிகள் அனுமதி

**(கொழும்பு)**

**பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படக்கூடிய தடுப்பூசியாக பைஸர் தடுப்பூசியே உள்ளதென அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிடம் பரிந்துரைத்துள்ளது.**

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருக்கும், சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதன் போது குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டதாக, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்தியகுழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினரான வைத்தியர்வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

மாணவர்களுக்கு வழங்குவதற்கு பொருத்தமான தடுப்புசி தொடர்பில் வைத்திய அதிகாரிகள் பரிந்துரைக்கும் மருந்தினை மாணவர்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# பிரதமரின் மருத்துவ ஆலோசகருக்கு கொரோனா தொற்று உறுதி

(கொழும்பு)

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் மருத்துவ ஆலோசகர் மருத்துவர் எலியந்தவைட் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டு தற்போது கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.அவரது குடும்ப உறுப்பினர்கள் சிலருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.



மருத்துவர் எலியந்த வைட், ஆன்மீகச் செயற்பாடுகள் மூலம் கொரோனா தொற்றை ஒழிக்க முடியும் என்ற கருத்தை வெளியிட்டு வந்தவர். கொரோனா தொற்றை ஒழிப்பதற்காக வென புனித நீர் அடங்கிய பானைகளை அப்போதைய சுகாதார அமைச்சர் பவித்ரா உள்ளிட்ட சிலருடன் இணைந்து கங்கைகளில் போட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# நாமலுக்கு எதிராக போர்க்கொடி தூக்கும் உறுப்பினர்கள்

(கொழும்பு)

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் கீழ் உள்ள மேற்பார்வை உறுப்பினர் பதவிகளை மறுக்க பலர் தீர்மானித்துள்ளனர்.

ஆளுங்கட்சியின் பல மூத்த உறுப்பினர்கள் இது தொடர்பில் முடிவு செய்துள்ளனர். அதற்கமைய நாமல் ராஜபக்ஷவின் கீழ் உள்ள மேற்பார்வை உறுப்பினர் பதவிகளை நிராகரிப்பதற்கு அவர்கள் திட்டமிட்டுள்ளதாக நம்பத்தகுந்த தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளதென சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது வரையில் பதவி நிராகரிக்க தீர்மானித்துள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 8 வரை அதிகரித்துள்ளதாக கூறப்படுகின்றது. எப்படியிருப்பினும் எதிர்வரும் நாட்களில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் கீழ் 50 மேற்பார்வை உறுப்பினர்களை நியமிக்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# மாடி வீட்டில் தீ விபத்து



**(கொழும்பு)**

**வாதுவை, வேரகம பகுதியில் அமைந்துள்ள மாடி வீடில் நேற்றிரவு தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக வாதுவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

**தீ விபத்தின்போது பெற்றோர் வீடில் இல்லை என்றும், வீடில் இணைய வழிக் கற்கையில் ஈடுபட்டிருந்த 14 மற்றும் 11 வயதுடைய இரு சிறுமிகளை பிரதேசவாதிகள் பாதுகாப்பாக மீட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (நி-5)**

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அளவுக்கு மிஞ்சினால்!

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்று சொல்லுவார்கள். அது உண்மை தான். ஒருத்தருக்கு அளவுக்கு மீறிய புகழ் வந்துவிட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதுகூட ஆபத்தாக போய் விடுகின் றது உண்டு.

பழங்காலத்திலேயெல்லாம் கிரேக்க தேசத்திலே ஒரு பழக்கம் உண்டாம். அதாவது யாராவது ஒருத்தரை நாடுகடத்த வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றார் கள் என்று வைத்துக் கொள் ளுங்கள். அவர் பெயரை ஒரு மண்பாண்ட ஓட்டுச் சில்லிலே எழுத வேண்டியது. அதை ஒரு குறிப்பிட்ட பொது இடத்திலே போட்டுவிட வேண்டியது அவ்வளவுதான். இது மாதிரி பல பேர் போட்டுக் கொண்டு இருப்பார்கள். எல்லாம் குவிந்து கிடக்கும்.

அந்த ஓட்டுச்சில்லு குவியலில் யாருடைய பெயர் அதிகமாக இருக்கின்றதோ அந்த நபரை ஒரு பத்து ஆண்டுகள் நாடு கடத்தி விடுவார்கள். அது அந்த ஊர் பழக்கம்.

ஒரு நாள் அந்தக் குவியலுக்குப் பக்கத்திலே ஒரு ஆள் நின்று கொண்டிருந்தான். அவன் கையிலே ஒரு ஓட்டாஞ் சில்லு வைத்துக்கொண்டிருந்தான். அதிலே யார் பெயரையோ எழுதி அந்த இடத்திலே போட வேண்டும் என்று ஆசை.. ஆனால் அவன் படிக்காதவன். அதனால் எழுதத் தெரியவில்லை. யாராவது அந்த வழியாக வருகின்றார்களா? என்று பார்த்துக் கொண்டே நின்று கொண்டிருந்தான்.

ஒரு பெரியவர் வந்து கொண்டிருந்தார். அவரிடம் ஓடினான். கையிலே இருந்த மண்பாண்டச் சில்லை கொடுத்தான். ஐயா இதிலே ஒரு பேர் எழுதிக் கொடுங்களேன் என்றான். அந்தப் பெரியவர் அதை வாங்கி கையில் வைத்துக் கொண்டு என்ன பெயர் எழுத வேண்டும் சொல்லு என்றார்.

இவன் சொன்னான்... அரிஸ்டோட்டில் என்று எழுதுங்கள் என்றான். இதைக் கேட்டதும் அந்தப் பெரியவருக்கு அதிர்ச்சி. ஏன் தெரியுமா?

அவர்தான் அரிஸ்டோட்டில். தத்துவமேதை அரிஸ்டோட்டில். இருந்தாலும் தான் அவர் என்பதைக் காட்டிக் கொள்ளாமலே அந்த ஆளிடம் கேட்டார்.

அது சரி...அரிஸ்டோட்டில் உனக்கு என்ன கெடுதல் செய்தார். அவர் பேரை இதிலே எழுதச் சொல்கின்றாயே? ஏன் என்று கேட்டார்.

அவர் எனக்கு எந்தக் கெடுதலும் செய்யவில்லை. அவரை நான் பார்த்தது கூட இல்லை என்றான் அந்த ஆள்.

பின்பு எதற்காக அவரை நாடு கடத்த வேண்டும் என்று நீ ஆசைப்படுகின்றாய்? என்று கேட்டார் அரிஸ்டோட்டில். இப்பொழுது அந்த ஆள் சொன்னான்.

அரிஸ்டோட்டிலைப் பற்றி எல்லோரும் பேசுகின் றார்கள். அவர் மிகவும் நல்லவர். அவர் ஒரு பெரிய அறிவாளி என்கின்றார்கள். அவர் பெரிய வள்ளல், பேரறிஞர் இப்படி எல்லோரும் சொல்வதைக் கேட்டுக் கேட்டு எனக்கு மிகவும் அலுத்துப் போய்விட்டது.

அதனால் தான் வெறுப்பாகிவிட்டேன் என்றாராம்.

நம் நல்லவனாக இருப்பதிலே ஒன்றும் இடைஞ்சல் இல்லை. ஆனால் எங்களை நல்லவன் நல்லவன் என்று எல்லோரும் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள் என்றால் இடைஞ்சல் ஆரம்பம் என்று அர்த்தம். எதுவுமே அளவுக்கு மிஞ்சிப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

அளவுக்கு அதிகமாக ஆசைப்படாதவர்களிலே ஆபிரகாம் லிங்கனும் ஒருத்தர். அவர் ஒரு தடவை தன்னுடைய நண்பர்களிடம் பேசிக் கொண்டிருந்தாராம். ஒருத்தர் கேட்டிருக்கின்றார்...ஒரு மனிதனுக்கு கால்கள் எவ்வளவு உயரம் இருக்க வேண்டும்? என்று கேட்டாராம்.

இதற்கு ஆபிரகாம் லிங்கன்... இடுப்பிலிருந்து தரையைத் தொடுகின்ற அளவுக்கு உயரம் இருந்தால் போதும் என்றாராம்.



# சிறுவர் அரங்கம்

## சிங்கம்- அசிங்கம்



அப்பொழுது அவ் வழியே சிங்கம் வந்தது. சிங்கம் அமைதியாக அவ்வழியே அவர்களை கடந்து செல்கையில் புலியும், நரியும் தாங்கள் இனியாரும் சிங்கத்திற்கு பயப்படமாட்டோம் என்று அதன் காதில் விழுமாறு சற்று சத்தமாகவே சொன்னார்கள்.

சிங்கம் அதைக்கேட்டு ஒன்றும் சொல்லாமல் அமைதியாக சென்று விட்டது.

புலியும், நரியும் இப்படி சொல்லியும் சிங்கம் அமைதியாக சென்றதால் சிங்கம் உண்மையிலேயே தன்னுடைய பலத்தை இழந்து விட்டது என்றும் அது பயந்து தான் அமைதியாக செல்கிறது என்றும் தங்களுக்குள் பேசிக் கொண்டன.

சிங்கத்தை அடிக்கடி புலி, நரி, கரடி, சிறுத்தை, ஓநாய் முதலிய மிருகங்கள் கேலி செய்து வந்தன. சிங்கமும் அமைதியாக அவர்களின் பேச்சைக் காதில் வாங்காமல் சென்று விடும்.

ஒருநாள் சிங்கம் வேட்டைக்குச் சென்று ஒரு மானைக்கொன்று அதைத் தன்னுடைய வாயில் கவ்விக்கொண்டு குகையை நோக்கி வந்து கொண்டிருந்தது.

சிங்கம் வழக்கம்போல் குகைக்கு செல்லும் வழியில் நரி, புலி, கரடி, சிறுத்தை, ஓநாய் முதலிய மிருகங்கள் நின்று கொண்டிருந்தன.

சிங்கம் தூரத்தில் இருந்தே அவர்களை பார்த்துவிட்டபடியால் அமைதியாக நடந்து வந்தது.

நரி மற்ற மிருகங்களிடம் தான் சிங்கத்தின் வாயில் கவ்விக் கொண்டிருக்கும் மானை பறித்து வருவதாக கூறி சிங்கம் வரும்வழியில் குறுக்கே சென்று நின்றது. சிங்கமும் நரியின் அருகே வந்துவிட்டது.

(தொடரும்)

# மகாபாரதம்




தான் பெற்றெடுத்த மகன்கள் இருவரும் சூதாடுகையில் தாய் எந்த மகனின் வெற்றியை விரும்புவாள்? யாருடைய தோல்வியை அவள் விரும்புவாள்? அந்தத்தாய் இரு மகன்களிடையே செயலற்றுத் துன்புறுவது போல நான் துன்புறுகிறேன்.

இந்நிலையில் எனக்கும், என் சுற்றத்தாருக்கும் நன்மை தரத்தக்க ஒரு வழியைத்தெரிவிக்க வேண்டுகிறேன்" என்று கேட்டுக் கொண்டார்.

நாரதர் "கண்ணா ஒருவனுக்கு இரண்டு வகையான துன்பங்கள் உண்டு. ஒன்று உட்பகை. மற்றது வெளிப்பகை. சுற்றத்தாரால் வருவது உட்பகை. மற்றோரால் வருவது வெளிப்பகை. வெளிப்பகையை விடக் கொடியது உட்பகை. நீர் உன் சுற்றத்தாரிடம் கொடுத்துவிட்ட நாட்டைத் திரும்ப பெற எண்ணுகிறீர்.

கொடுத்து விட்ட ஒன்றை திரும்பப்பெறுவது உமிழ்ந்த உணவை மீண்டும் எடுத்து உண்ண விரும்புவதைப் போன்றது. ஆகவே அவர்களிடமிருந்து விரும் துன்பத்திலிருந்து தப்பிக்க வழி இழந்த நாட்டை திரும்பிக் கேட்காமல் இருப்பதே ஆகும்.

ஆனாலும் அவர்களின் கெட்ட உள்ளத்தை மாற்றும் ஆயுதம் ஒன்று உள்ளது. அது இரும்பினால் செய்யப்பட்டதல்ல. மென்மையானது. மென்மையானதாயினும் அவர்களை அடக்கி விடும்" என்றார்.

கண்ணன் நாரதரைப் பார்த்து "இரும்பினால் செய்யப்படாத மென்மையான ஆயுதம் எது?" என்று வினவ, நாரதர், "கண்ணா, அந்த மென்மையான ஆயுதம்... இன்சொல்.." என்றார்.

"இனிய சொற்கள் கூர்மையான அரத்தைப் போன்றவை. இனிய நன்மொழியால் சுற்றத்தாரிடம் இனிமையாகப் பேசி அவர்களை அணைத்துச்செல்ல வேண்டும்.

வேண்டிய பொருள்களைக் கொடுத்து அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும். எப்போதும் சுற்றத் தாரைக் காப்பதன் மூலம் ஒருவருடைய பொருளும், புகழும், ஆயுளும் பெருகும்.

எனவே நீர் சுற்றத்தார்க்கு எவ்வித குறையும் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அனைவரும் உன்னைச் சார்ந்தே உள்ளனர். உயிர்கள் அனைத்துக்கும் நாதரே... நீர் அறியாதது ஏதுமில்லை" என்று முடித்தார்.

(தொடரும்)

நம்முடைய எண்ணங்களை நாம் மறைத்தாலும் நமது செயல்கள் அவற்றை அம்பலப்படுத்திவிடும்.
~ லெர்ரி கிளாட்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரசியல் தலைமையற்ற அநாதைகளாக தமிழ் மக்களை ஆக்கியவர்கள்...

உலகம் முழுவதிலும் பேசுபடுபொருளாய் கொரோனாப் பெருந்தொற்று இருக்கின்ற போதிலும் அதற்காக எங்களின் அரசியல் விவகாரத்தை நாம் ஓரங்கட்டிவிட முடியாது.

மாறாக நாம் அனைவரும் எமது அரசியலில் உன்னிப்பான கவனிப்புடன் இருப்பது அவசியம் என்பதை நீங்கள் யாபேரும் ஏற்றுக் கொள்வீர்கள் என நம்பலாம்.

அந்தவகையில் தமிழ் இனத்தின் இன்றைய மிகப் பெரும் அவலம் தமிழ் மக்களுக்கான ஓர் அரசியல் தலைமை இல்லை என்பதுதான்.

சுருங்கக்கூறின் விடுதலைப் புலிகளுக்குப் பின்பாக ஒரு சரியான தலைமையை தமிழ் அரசியல் தரப்புகள் உருவாக்கத் தவறிவிட்டன.

இதற்கு மேலாக, தமிழ் மக்களும் தத்தம் விருப்பு வெறுப்புகளுக்கு அமைவாக நடந்து கொண்டதன் காரணமாக தக்கதோர் அரசியல் தலைமையை உருவாக்க முடியாமல் போயிற்று.

இதன் தாக்கம் இன்றுவரை தமிழ் மக்களின் வாழ்விலும் உரிமை விடயத்திலும் மிகப்பெரும் எதிர்விளைவை ஏற்படுத்தி வருகிறது.

உண்மையில் வடக்கு மாகாண சபை அமைந்தபோது, அதனூடாக நல்லதொரு தமிழ் அரசியல் தலைமையை உருவாக்கி இருக்க வேண்டும்.

ஆம், வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடந்தபோது தமிழ் மக்கள் வரலாறு காணாத அளவில் தமது ஆதரவை வழங்கியிருந்தனர்.

தமிழர் அரசு மலர்ந்தது என்று கூறுமளவில் நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் தலைமையில் வடக்கு மாகாண அரசு அமைந்தது.

நீதியரசராக இருந்த சி. வி. விக்னேஸ்வரன் அவர்கள் ஒரு இனத்தின் தலைமைக்குரிய பண்புகளைக் கொண்டிருந்தார்.

சர்வதேச சமூகம் அவரைக் கனம் பண்ணக்கூடிய அளவில் அவரின் அறிவாற்றலும் ஆளுமைப் பண்புகளும் நேர்மைத்தனங்களும் இருந்தன.

இதற்கு மேலாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மதிக்கக்கூடிய ஒரு அரசியல் தலைவராக நீதியரசர் விக்னேஸ்வரன் விளங்கினார்.

ஆனால் சுயநலமிக்க நம் தமிழ் அரசியல் தரப்புகள் அவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து எல்லாவற்றையும் பிசக்கிவிட, இன்று தமிழ் இனத்துக்கு ஒரு பலமான அரசியல் தலைமையும் அரசியல் தலைவனும் இல்லை என்று வேதனைப்படுகின்ற அளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

அதன் விளைவாக இன்று உதிரிகளாக நிற்கக்கூடிய நம் தமிழ் அரசியல் தரப்புகள் பாராளுமன்றப் பதவியை மையப்படுத்தி தங்களின் அரசியல் செயற்பாட்டை நகர்த்துகின்றனரே தவிர, தமிழ் மக்கள் பற்றிய சிந்தனை அவர்கள் ஒருவரிடமும் இல்லை என்பதை அடித்துக்கூற முடியும்.

ஆக வடக்கு மாகாண சபை முதலமைச்சராக இருந்த நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் மீது யாரெல்லாம் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தார்களோ; அதன் பின்னணியில் யாரெல்லாம் இருந்து செயற்பட்டார்களோ அவர்கள் தமிழ் மக்களுக்குச் செய்த அநியாயம்தான் இன்று தமிழ் இனம் அரசியல் தலைமையற்று அநாதையாய் இருப்பதற்கு காரணம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறித்தானாக வேண்டும்.

# ராஜபக்ஷர்களின் ஆட்சி இத்துடன் நிறைவு பெறும்

## முருத்தெட்டுவே ஆனந்த தேரர்

(கொழும்பு)

கோவிட் தாக்கத்தினாலும் பொருளாதார பாதிப்பினாலும் நடுத்தர மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். திறமையானவர்களுக்கு உரிய பதவிகள் வழங்கவில்லை. இதுவே அனைத்து பிரச்சினைக்கும் மூல காரணம். நாட்டுக்கு சேவையாற்றிய ராஜபக்ஷர்களின் ஆட்சி இத்துடன் நிறைவு பெறும் என அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

அபயராம விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், அவசர கால சட்டத்தை அமுல்படுத்தி கோவிட்-19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியுமாயின் அதனை ஏற்றுக் கொள்வோம். ஆட்சியதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்காகவே இதுவரையில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் அனைத்தும் அவசரகால சட்டத்தை அமுல்படுத்தியுள்ளது. பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் மீள்வதையும், குறைந்த விலைக்கு அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்வதையும் குறித்து மக்கள் அவதானம் செலுத்தியுள்ளார்கள். அரசாங்கம் நகைச்சுவை காட்டுகிறதா? என்ற சந்தேகம் காணப்படுகிறது. நாட்டில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் தொடர்பில் நன்கு அறிவோம்.

நடுத்தர மக்கள் அத்தியாவசிய பொருட்களை பதுக்கும் மாபியாக்களாக செயற்படவில்லை. அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்தவர்களின் பெரும்பாலானோர் சந்தை மாபியக்களாக செயற்படுகிறார்கள். பொருத்தமானவர்களுக்கு உரிய பதவி வழங்கவில்லை.

கோவிட் தாக்கத்தினை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. திறமையானவர்களுக்கு உரிய பதவிகள் வழங்கப்படவில்லை. நாட்டுக்கு சேவையாற்றிய ராஜபக்ஷர்களின் ஆட்சி இத்துடன் முடிவுக்கு வரும் என்றார். (ம-3)

# மேலும் ஒரு வாரத்துக்கேனும் ஊரடங்கை நீடிக்க வேண்டும்

## அரச தாதிகள் சங்கம் வேண்டுகோள்

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் கடந்த ஒன்றரை மாதத்திற்கு முன்னரே நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இதுவரையில் பதிவாகியுள்ள மரணங்களில் 50 வீதத்தைத் தவிர்த்திருக்கலாம். எனவே ஊரடங்குச் சட்டத்தினை மேலும் ஒரு வாரத்திற்கேனும் நீடிக்க வேண்டும் என்று அரச தாதிகள் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நடைபெற்ற இணைய வழி கலந்துரையாடலின்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளதால் கோவிட் பரவல் நிலைமை கணிசமானளவு குறைவடைந்துள்ள போதிலும், ஊரடங்குச் சட்டம் மேலும் ஒரு வாரத்திற்கேனும் நீடிக்கப்பட வேண்டும் என்றார். (ம-3)

### வடக்கு மாகாணத்தில்

# கடந்த புதன்கிழமை மட்டும் 459 பேருக்கு தொற்று

## 8 பேர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை 459 கோவிட்-19 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் செப்ரெம்பர் மாதத்தின் முதல் 8 நாட்களில் வடக்கு மாகாணத்தில் 4 ஆயிரத்து 546 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதுடன் 121 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதாரத் துறையின் அறிக்கையின் படி, நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 178 தொற்றாளர்களும் வவுனியா மாவட்டத்தில் 121 தொற்றாளர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 77 தொற்றாளர்களும் முல்லைத்தீவில் 57 தொற்றாளர்களும் மன்னாரில் 27 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 4 பேரும் மன்னார் மாவட்டத்தில் 2 பேரும் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் தலா ஒருவரும் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர்.

2020 மார்ச் தொடக்கம் நேற்று முன்தினம் வரை வடக்கு மாகாணத்தில் 31 ஆயிரத்து 375 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 530 பேர் கோவிட்-19 தொற்றினால் உயிரிழந்துள்ளனர். அதிகப்படியாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 14 ஆயிரத்து 651 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 311 பேர் உயிரிழந்துள்ளனர். (ம-3,33)

# இன்று ஆவணி விநாயகர் சதுர்த்தி



இந்துக்கள் அனைவருக்கும் இஷ்ட தெய்வமாக விளங்கும் விநாயகருக்கு ஆவணி மாத சதுர்த்தி திதியில் கொண்டாடப்படும் விநாயகர் சதுர்த்தி நாள் மிகவும் விசேஷமாக கருதப்படுகிறது.

ஆவணி மாதத்தில் வளர்பிறையில் நான்காம் நாளன்று வரும் சதுர்த்தி 'விநாயகர் சதுர்த்தி' என்று கொண்டாடப்படுகிறது. இது விநாயகர் அவதரித்த தினமாகவும் இந்துக்களால் நம்பப்படுகிறது.

முக்கியமாக உருவ அருவ அருவுருவ வழிபாட்டு முறையையே இவ் ஆவணிச் சதுர்த்தி விரதம் எமக்கு நினைவூட்டுகிறது.

பசுஞ்சாணி அல்லது மஞ்சள் முதலில் அருவமாகவும் மற்றும் பிடிக்கப்பெற்ற பிள்ளையார் உருவமாகவும் நீரில் கரைத்த பின்னர் அருவுருவமாகவும் இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறார் எனும் தத்துவத்தை எமக்கு புரியவைக்கின்ற விநாயகர் சதுர்த்தி இன்றைய தினம் ஆகும்.

## மருத்துவக் குறிப்பு

வாழைப்பூவை தனியாகவோ அல்லது துவரம் பருப்புடன் சேர்த்தோ சமையல் செய்து சாப்பிட்டு வர அது இரத்த மூலத்தைக் குணமாக்கும்.

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

திருநீறு, விபூதி, பசுமம், பசிதம், சாரம், இரட்சை என்றபல பேர்களையுடையது திருநீறு.

ஆன்மாக்களின் பாவங்களையெல்லாம் நீறு செய்வதனால் திருநீறு பசுமம்.

வி- மேலான, பூதி- ஐஸ்வர்யம், மேலான ஐஸ்வர்யத்தைத் தருவதால் விபூதி. இங்கே மேலான ஐஸ்வர்யம் என்பது முக்திப்பேறு என உணர்க.

அறியாமையழியும்படி சிவஞானமாகிய சிவ தத்துவத்தை விளக்குவதால்- பசிதம், ஆன்மாக்களின் மன மாசினைக் கழுவுவதால்- சாரம்.

ஆன்மாக்களைத் துன்பத்தினின்றும் நீக்கி இரட்சிப்பதனால்- இரட்சை.

# மாகாண சபைத் தேர்தல்கள்

32

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



| அட்டவணை-23- விருப்புவாக்குகள் எண்ணல் (2009) ஊவா மாகாண சபை | | | | | |
|---|---|---|---|---|---|
| மாகாண சபை | மாவட்டம் | A | | B | |
| | | கட்சிகள் | சுயேச்சை | கட்சிகள் | சுயேச்சை |
| ஊவா | பதுளை 14 | 4 | 4 | - | |
| | மொனராகலை | 9 | 3 | 2 | - |
| சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை, B- விருப்புக்களை எண்ணுவதற்கு தகைமை பெற்ற வேட்பு மனுக்களின் எண்ணிக்கை | | | | | |

போட்டியிட்ட கட்சிகளில்/ குழுக்களில் நான்கு கட்சிகளுக்கு மட்டுமே ஆசனங்கள் கிடைத்தன. அந்நான்கு கட்சிகளும் பெற்ற வாக்குகள், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி (418,906), ஐக்கிய தேசியக் கட்சி (129,144), மக்கள் விடுதலை முன்னணி (14,639), மலையக மக்கள் முன்னணி (9, 227) ஆகும். அவை பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அட்டவணை 24இல் காட்டப்பட்டுள்ளது.

ளப்பட்டன. மற்றும் 4 சுயேச்சைக் குழுக்கள் என்பவற்றின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

தென் மாகாண சபைக்காகப் போட்டியிட்ட சுயேச்சைக்குழுக்கள் மிகச்சொற்பமானவையாகும். காலி மாவட்டத்திற்கு 4 உம், மாத்தறை மாவட்டத்திற்கு 3 உம், அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு 6 உம் ஆக போட்டியிட்ட மொத்தச் சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கை 13 ஆகும்.

| அட்டவணை 24 ஊவா மாகாண சபைத் தேர்தல் - 2009 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் | கட்சிகள் | | | | | |
| | ஐமசுமு | | ஐதேக | JVP | மமமு | மொத்தம் |
| பதுளை | 14 | 5 | 1 | 1 | 21 | |
| மொனராகலை | 9 | | 2 | - | - | 11 |
| Bonus | 2 | | | | | 2 |
| மொத்தம் | 25 | 7 | 1 | 1 | 34 | |
| ஐமசுமு- ஐக்கியமக்கள்சுதந்திரக்கூட்டணி, ஐதேக- ஐக்கியதேசியக்கட்சி, JVP-மக்கள் விடுதலை முன்னணி, மலையக மக்கள் முன்னணி (மமமு) | | | | | | |

## தென் மாகாணத்தின் மாகாணசபைத் தேர்தல் 2009

2009.08.03 ஆம் திகதியன்று தென் மாகாண சபை கலைக்கப்பட்டமையால் தேர்தல்கள் ஆணையாளரினால் காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்கள் சார்பாக வேட்பு மனுக்கள் கோரும் அறிவித்தல் 2009.08.17 ஆம் திகதிய 1613/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டன. அதற்கிணங்க 2009. 08.21 ஆம் திகதி முதல் 2009. 06.24 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரையிலான காலக்கெடுவுக்குள் காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்காக வேட்புமனுக்கள் கையேற்கப்பட்டன.

தென் மாகாண சபைக்கு 18 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினால் வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டதோடு, ஒவ்வொரு மாவட்டத்திற்குமிணங்க காலிக்கு 15 உம், மாத்தறைக்கு 14 உம், அம்பாந்தோட்டைக்கு 10 உம் என்ற வகையில் 39 வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்

அதற்கமைய, காலி மாவட்டத்தின் சார்பில் 494 வேட்பாளர்களும், மாத்தறை மாவட்டத்தின் சார்பில் 357 வேட்பாளர்களும் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் சார்பில் 240 வேட்பாளர்களும் போட்டியிட்டனர். அதற்கிணங்க தென் மாகாண சபைக்காக 53 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக போட்டியிட்ட மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கை 1091 ஆகும். 2009ஆம் ஆண்டு ஒக்டோபர் 10 ஆம் திகதி தென் மாகாணசபைக்கான தேர்தல் நடைபெற்றது.

## தென்மாகாணத்தின் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகள்

2009 ஆம் ஆண்டின் தென் மாகாணசபைத் தேர்தலில் பின் வரும் கட்சிகள் போட்டியிட்டன. ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டணி(ஐமசுமு), ஐக்கியதேசியக்கட்சி(ஐதேக), மக்கள் விடுதலை முன்னணி(JVP), ஐக்கிய தேசியக்கூட்டமைப்பு, ஜனநாயக ஐக்கிய முன்னணி, எக்ஸத் லங்கா பொது ஜன பக்சய, எக்ஸத் லங்கா மஹா சபா, ஐக்கிய சோசலிச கட்சி, ஜன செத பெரமுன, தேசியமக்கள் கட்சி, ஜாதிக சங்வர்தன பெரமுன, தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி, ருஹுனு ஜனதா பக்சய, இடதுசாரி முன்னணி, ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி, ஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸ், சோசலிச சமத்துவக்கட்சி, சிங்களயே மஹசம்மத பூமிபுத்ரபக்சய, சுயேச்சை குழுக்கள் ஆகியன போட்டியிட்டன.

இத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (A), அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (B), நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை(C), செல்லுப்படியான வாக்குகளின் எண்ணிக்கை (D) அட்டவணை 25இல் தரப்பட்டுள்ளது.

| அட்டவணை 25 தென்மாகாணசபை 2009 | |
|---|---|
| A | 1,761,859 |
| B | 1,236,594 |
| C | 52,082 |
| D | 1,184,512 |

தென் மாகாண சபைத் தேர்தலில் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை மற்றும் விருப்புக்களை எண்ணுவதற்கு தகைமை பெற்ற வேட்பு மனுக்களின் எண்ணிக்கை என்பவை அட்டவணை 26இல் காட்டப்பட்டுள்ளன.

போட்டியிட்ட கட்சிகளில்/ குழுக்களில் மூன்று கட்சிகளுக்கு மட்டுமே ஆசனங்கள் கிடைத்தன. அம்மூன்று கட்சிகளும் பெற்ற வாக்குகள், ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டணி (804,071), ஐக்கிய தேசியக்கட்சி (297,180), மக்கள் விடுதலை முன்னணி(72,379), அவை பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அட்டவணை 27 இல் காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் கட்டளைக்கமைய 2008.05.10 ஆம் திகதி கிழக்கு மாகாணத்திற்கான தேர்தல் நடத்தப்பட்ட போதிலும் வடமாகாணத்தின் மாகாண சபையை நிறுவுவதற்கான தேர்தல் நடாத்தப்பட்ட போதிலும் வட மாகாணத்தின் மாகாண சபையை நிறுவுவதற்கான தேர்தலொன்றை நடத்துவது தொடர்பான ஜனாதிபதியின் கட்டளை 2009,2010,2011 ஆண்டுகளில் மேற்கொள்ளப்படவில்லை.

## கிழக்கு, வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் மாகாணசபைத் தேர்தல்கள் 2012

கிழக்கு, வடமத்திய மற்றும் சபரகமுவ மாகாணங்களின் மாகாணசபைகள்2012 ஜூன் மாதம் 27 ஆம் திகதி நள்ளிரவுடன் கலைக்கப்பட்டது. அதற்கமைய அம் மாகாணசபைகளுக்குரிய மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, அநுராதபுரம், பொலநறுவை, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய நிர்வாக மாவட்டங்களுக்கான வேட்புமனுக் கோரும் அறிவித்தல் 2012.06.28 ஆம் திகதியைக் கொண்ட 1764/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

| அட்டவணை-26- விருப்புவாக்குகள் எண்ணல் (2009) தென் மாகாண சபை | | | | | |
|---|---|---|---|---|---|
| மாகாண சபை | மாவட்டம் | A | | B | |
| | | கட்சிகள் | சுயேச்சை | கட்சிகள் | சுயேச்சை |
| தென் | காலி | 15 | 4 | 3 | - |
| | மாத்தறை | 14 | 3 | 3 | - |
| | அம்பாந்தோட்டை | 10 | 6 | 3 | - |
| A- சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை, B- விருப்புக்களை எண்ணுவதற்கு தகைமை பெற்ற வேட்பு மனுக்களின் எண்ணிக்கை | | | | | |

| அட்டவணை 27 தென் மாகாண சபைத் தேர்தல் -2009 கட்சிகள் பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | கட்சிகள் | | | |
| | ஐமசு | முஜதேக | JVP | மொத்தம் |
| காலி | 16 | 6 | 1 | 23 |
| மாத்தறை | 12 | 5 | 1 | 18 |
| ஹம்பாந்தோட்டை | 8 | 3 | 1 | 12 |
| மழுரெள | 2 | - - | 2 | |
| மொத்தம் | 38 | 14 | 3 | 55 |
| ஐமசுமு- ஐக்கியமக்கள்சுதந்திரக்கூட்டணி, ஐதேக- ஐக்கியதேசியக்கட்சி, JVP மக்கள் விடுதலை முன்னணி | | | | |

(தொடரும்...)

## பெண்...

வீடொன்றில் இருந்து நேற்று வியாழக்கிழமை காலை பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டில் இருந்தவர்கள் குறித்த பெண்ணிற்கு தேநீர் கொடுக்கச் சென்றபோதே அவர் சடலமாக அடையாளம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தனங்கிளப்பு பகுதியைச் சேர்ந்த 60 வயதான பெண் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரியில் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,30)

## 175 பேர்...

துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இதில் 96 ஆண்களும் 79 பெண்களும் அடங்குகின்றனர்.

2020 மார்ச் தொடக்கம் நேற்று முன்தினம் வரை 10 ஆயிரத்து 864 பேர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர். (ம-3)

## 12 - 18 வயது..

போடுவதற்கு கவனம் செலுத்தப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கோவிட் - 19 நோய்த்தொற்றுக் காரணமாக, பாடசாலைகள் அவ்வப்போது சுமார் ஒன்றரை வருடங்கள் மூடப்பட வேண்டியிருந்தது. அதனால் மாணவர்களுக்கு கோவிட்-19 தடுப்பூசி போட ஆரம்பிக்க வேண்டும் என்றும் சுகாதார அமைச்சர் கூறினார்.

நேற்று சுகாதார அமைச்சில் ஜூம் தொழில்நுட்பம் குறித்த கலந்துரையாடலிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உலக சுகாதார நிறுவனம் உட்பட பல சர்வதேச நிறுவனங்கள் மாணவர்களுக்கு தடுப்பூசி போடுவதற்கான பல அளவுகோல்களை சுட்டிக்காட்டியுள்ளன.

மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் திட்டம் தொடங்கியவுடன், தரம் 7 முதல் தரம் 13 வரையிலான மாணவர்களுக்கு தடுப்பூசி போடலாம்.

ஆசிரியர்கள் உட்பட கல்வி சாரா ஊழியர்களுக்கு முழுமையாக தடுப்பூசி போடப்பட்டுள்ளதால், மாணவர்களுக்கு தடுப்பூசி முடிந்தவுடன் பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும் என்று நம்பப்படுகிறது.

இதன் கீழ், சுமார் இரண்டு மில்லியன் மாணவர்களுக்கு தடுப்பூசி போட முடியும் என்றார். (ம-3)

## அரசின் போலித்...

தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகருக்கு அண்மையில் அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையில் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் அடங்கியுள்ளன.

இந்த நிலையில், உண்மையான நிலைமைகள் குறித்த தகவல்கள் அடங்கிய கடிதம் ஒன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உயர்ஸ்தானிகருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

போரின் இறுதி நாளில் 14 ஆயிரம் பேர் மாத்திரமே இறந்தார்கள் என்பது உள்ளிட்ட உண்மைக்குப் புறம்பான பல கருத்துகள் அரசாங்கத்தின் அறிக்கையில் உள்ளடங்கியிருக்கிறது எனச் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-3)

## ஊரடங்கு...

துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் கோவிட்-19 தடுப்பூசி வழங்கப்பட்ட பின்னரும் உயிரிழப்போரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி இல்லை என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

"கடந்த காலங்களில் இறந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் தடுப்பூசி போடப்படாத நபர்களாவர். மேலும் அதிகமான தனிநபர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களில் தடுப்பூசி போடப்பட்டவர்களும் காணப்படுகின்றனர்.

எனினும் எதிர்காலத்தில் வைரஸ் தொடர்பான இறப்புகளின் எண்ணிக்கை குறையும் என்று எதிர்பார்க்கிறோம்.

வெளிநாடுகளுக்கு பயணம் செய்யும் நபர்களுக்கு பைஸர் தடுப்பூசியை வழங்குவதற்கான திட்டம் முன்னெடுக்கப்படும்.

பைஸர் தடுப்பூசி அனைத்து மாவட்டங்களிலும் குறிப்பாக கல்விக்காக வெளிநாடு செல்லும் இளைஞர்கள் மற்றும் வேலைக்காக செல்லும் நபர்களுக்கும் வழங்கப்படுகிறது" என்று சுகாதார அமைச்சின் பேச்சாளர், மருத்துவ வல்லுநர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். (ம-3)

## வவுனியாவில்..

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று இரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கோவிட் தொற்றுப் பரவல் அடைந்துள்ள நிலையில் 149 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்றாளர்களை கோவிட் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-3,250,299)

## வட மாகாண...

சேர்ந்த 63 வயதுடைய ஆண் ஒருவரும் யாழ்ப்பாணம் வேம்படியைச் சேர்ந்த 73 வயதுடைய ஆண் ஒருவரும் அரியாலையைச் சேர்ந்த 81 வயதுடைய ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

தென்மராட்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மீசாலை மேற்கைச் சேர்ந்த 91 வயதுடைய பெண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் கோவிட்-19 தொற்றுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளில் குறித்த நபர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த 88 வயதுடைய பெண், தெல்லிப்பழையில் உயிரிழந்த 88 வயதுடைய பெண் ஆகியோருக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் சிகிச்சை பெற்றுவந்த முதியவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று வியாழக்கிழமை பிற்பகல் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

மட்டுவில் சந்திரபுரம் பகுதியைச் சேர்ந்த 85 வயதான முதியவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சியில் உயிரிழந்த 81 வயது முதியவர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை ஊடாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட பிசிஆர் மாதிரிகள் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலை கொரோனா ஆய்வுகூடத்தில் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தியபோதே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் கோவிட் தொற்றுக் காரணமாக நேற்று 08 மரணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கோவிட் தொற்றுக் காரணமாக சிகிச்சை பெற்று வந்த, தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மற்றும் தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் இருந்தோர் என 08 பேர் கோவிட் தொற்றால் மரணமடைந்துள்ளனர். இவர்களில் 6 பேர் 60 வயதிற்கு மேற்பட்டவர்களாவர்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதியில் நேற்றைய தினம் ஒருவர் கோவிட் தொற்றினால் மரணமடைந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் சுகவீனம் காரணமாக மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உடையார்கட்டு பகுதியைச் சேர்ந்த 84 வயதுடையவரே மரணமடைந்துள்ளார்.

(ம-3,18,30,33,250,299)

## அரச வைத்திய...

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோவிட் ஒழிப்பு செயலணியின் செயற்பாடுகளிலிருந்து விலகியதாக அதன் ஊடகக் குழு உறுப்பினர் வைத்தியர் நலிந்த ஹேரத் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உறுதிப்படுத்தினார்.

நிபுணர் குழு விஞ்ஞான ரீதியான வழிமுறைகளை முன்வைத்தபோதிலும் இறுதியில் நடைமுறைப்படுத்தப்படும்போது அதற்கு முரணாகவே செயற்படுத்தப்படுவதாகவும் அவர் கூறினார்.

தொழில்நுட்பக்குழு எடுத்த தீர்மானம் இறுதியில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை எனவும் வைத்தியர் நலிந்த ஹேரத் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தார்.

கோவிட் தொழில்நுட்ப குழுவிலிருந்து வைத்திய நிபுணர்களான ஆனந்த விஜயவிக்ரம மற்றும் அசோக குணரத்ன ஆகியோரும் ஏற்கெனவே விலகியமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 6 மின் மயானங்...

அனுமதி வழங்கியுள்ளார்.

வடக்கில் கொரோனாவின் காரணமாக அதிக மரணங்கள் ஏற்படும் நிலையில், சடலங்களை எரிப்பது தொடர்பில் ஏற்படும் நெருக்கடிகள் தொடர்பில் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் ரஞ்சன் தலைமையில் நேற்றைய தினம் அவசரமாக ஆராயப்பட்டது.

இதன்போது தற்போது யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் மட்டுமே மின் தகன மயானங்கள் உள்ளதனால் வடக்கில் தினமும் இடம்பெறும் மரணங்களின் எண்ணிக்கைக்கு ஈடுகொடுக்க முடியாமல் உள்ளதனால் அவசரமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன்போதே குறித்த விடயத்திற்கு தீர்வாக மாகாணத்தில் மேலும் 6 தகன மயானங்களை அமைக்க 6 உள்ளூராட்சி சபைகளுக்கு அனுமதி வழங்கியது. அத்துடன் நிதி வல்லமை மற்றும் திட்ட விருப்பம் இருந்தால் இந்த 6 சபைகள் பணியை உடன் முன்னெடுக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வலி.வடக்கு, வலி.தெற்கு, நல்லூர் ஆகிய பிரதேச சபைகளுக்கும் சாவகச்சேரி நகர சபைக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச சபைக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்கும் மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபைக்கும் இந்த அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## தொழில்நுட்ப...

எதிர்வரும் திங்கட்கிழமை தளர்த்துவதாக இருந்தால், அதுதொடர்பில் தொழில்நுட்ப ரீதியில் தீர்மானம் மேற்கொள்ள வேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவிச்செயலாளர் வைத்தியர் நவீன் த சொய்சா தெரிவித்தார்.

கோவிட் தனிமைப்படுத்தல் சட்டத்தை எதிர்வரும் திங்கட்கிழமை நீக்குவதாக இருந்தால், மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், நாட்டில் தற்போது மேற்கொள்ளப்படும் கோவிட் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை மற்றும் பயணக் கட்டுப்பாடு காரணமாக எதிர்வரும் காலங்களில் கோவிட் மரணங்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவில் குறைவடையும் என எதிர்பார்க்கின்றோம்.

கோவிட் தனிமைப்படுத்தல் சட்டத்தை தளர்த்தி, எதிர்வரும் 13 ஆம் திகதி நாட்டைத் திறப்பதாக இருந்தால், இதுவரை ஓரளவு கட்டுப்பாட்டுக்கு கொண்டுவந்திருக்கும் கோவிட் நிலைமையை, அவ்வாறே தொடர்ந்து பாதுகாத்துக் கொள்வதற்கு பெரும்பாலானவர்களுக்கு கோவிட் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை பூரணப்படுத்த வேண்டும். அத்துடன் சுகாதார வழிகாட்டல்களை பாதுகாத்துக்கொள்வது கட்டாயமாகும். நாட்டை முழுமையாக திறப்பதாக இருந்தால், கூடுதலாக எச்சரிக்கையான பிரிவினருக்கு கோவிட் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை மேலும் துரிதப்படுத்த வேண்டும்.

மேலும் தற்போதைய தனிமைப்படுத்தல் சட்ட கால நிலைமையில் நூறுவீதம் திருப்தியடையும் வகையில் நாடு கடைப்பிடிக்காவிட்டாலும் குறிப்பிடத்தக்க அளவில் கோவிட் நோயாளர்கள் மற்றும் கோவிட் மரணங்களின் எண்ணிக்கையில் குறைவை காண்கின்றோம்.அதனால் எதிர்வரும் 13ஆம் திகதி நாட்டை முழுமையாக திறப்பதாக இருந்தால், தற்போது கட்டுப்படுத்திக் கொண்டுவரும் கோவிட் கட்டுப்பாட்டை தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ம-3)

**ENGLISH** ஆங்கிலம்
பிரத்தியேக வகுப்புகள்
அனுபவம் மிக்க ஆசிரியரினால்
உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
**077 658 9443**
யாழ்ப்பாணம் (7873)

# 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு 3 ஆவது தடுப்பூசிக்கு பரிந்துரை

(கொழும்பு)

சினோபாம் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்ட 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு மூன்றாவது தடுப்பூசி வழங்குவதற்கான ஆலோசனை இலங்கை மருத்துவ சங்கத்தினரால் முன்வைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, மூன்றாவது தடுப்பூசியாக அஸ்ட்ராசெனகா, பைசர் அல்லது மொடர்னா தடுப்பூசிகளில் ஏதாவது ஒன்றை வழங்குமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அறிக்கை ஒன்று மருத்துவ சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முழுமையாக தடுப்பூசிகளை பெற்றுக் கொண்டவர்கள் சிலர் கடுமையான நோய் நிலைமைகளினால் பாதிக்கப்படுகின்றனர்.

முன்னெடுக்கப்படுகின்ற ஆய்வுகளில் 50 வயதுக்கு மேற்பட்ட அஸ்ட்ராசெனகா, பைசர் அல்லது மொடர்னா தடுப்பூசிகளில் ஏதாவது ஒன்றை பெற்றுக் கொண்டவர்களில், நோய் நிலைமைக்கு ஆளாகின்றவர்களின் எண்ணிக்கை குறைவாக காணப்படுவதோடு மரணங்களின் எண்ணிக்கையும் குறைவடைவதாக தெரியவந்துள்ளது.

இதற்கமைய சினோபாம் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசியாக அஸ்ட்ராசெனெகா, பைசர் அல்லது மொடர்னா தடுப்பூசிகளில் ஏதாவது ஒன்றை வழங்குமாறு இலங்கை மருத்துவ சங்கம் யோசனை முன்வைத்துள்ளது. (ம-03)

# மரண அறிவித்தல்



தோற்றம் 04 - 10 - 1940

மறைவு 06 - 09 - 2021

## வீரகத்தி கந்தப்பு

( ஓய்வுபெற்ற இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர் )

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் இடைக்குறிச்சி வரணியை வதிவிடமாகவும் கொண்ட வீரகத்தி கந்தப்பு கடந்த 06.09.2021 (திங்கட்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் வரதராஜனின் (லண்டன்) ஆருயிர்த் தந்தையும் பிரியதர்ஷியின் (லண்டன்) அன்பு மாமனாரும் வர்ஷிகா, ரித்விகன் ஆகியோரின் அன்புப் பேரனும் மகேஸ்வரி, காலஞ்சென்ற இராஜேந்திரா மற்றும் விக்கினேஸ்வரி (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கடந்த 07.09.2021 (செவ்வாய்க்கிழமை) அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இடைக்குறிச்சி கொடிக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இடைக்குறிச்சி,
வரணி.

தகவல்:-
குடும்பத்தினர்

# அரசு தனது நண்பர்களுக்கு மட்டும் சேவையாற்றுகின்றது

## எதிர்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

அரசாங்கம் தனது நண்பர்களுக்கு மட்டும் சேவையாற்றி வருகின்றது என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள எதிர்க் கட்சித் தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் நேற்றைய தினம் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில், இந்த அரசாங்கத்தால் உண்மையை மறைத்தல், அன்டிஜன் மோசடி, மருந்துப் பொருள் மோசடி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அனைத்து அனர்த்தங்களினால் நாட்டு மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். ஊழல் மோசடிகளுக்கு உச்ச அளவில் ஒத்துழைப்பு வழங்கும் அரசாங்கமொன்றே தற்பொழுது ஆட்சியில் உள்ளது.

அரசாங்கத்தினால் மக்களுக்கு செய்ய வேண்டிய நலத்திட்டங்களை எதிர்க் கட்சி செய்து வருகின்றது. உண்மையில் நாட்டு மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமாயின் ஆளும் கட்சி உறுப்பினர்களை போஷிக்காது நாட்டு மக்களின் பாதுகாப்பினை உறுதிசெய்ய வேண்டுமென சஜித் தெரிவித்துள்ளார். (ம-03)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1949 - 12 - 21

மறைவு 2019 - 10 - 19

அமரர்
**மாணிக்கம் நாகேந்திரம்**
( ஓய்வுநிலை தபால் அதிபர் - யாழ். பிரதம தபாலகம் )

(திதி : ஐப்பசி சஷ்டி)

கண்ணின் இமையாய்
காத்து நின்ற தலைவனே!
கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
என் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்!

# 23ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1981 - 08 - 21

மறைவு 1998 - 08 - 25

அமரர்
**நிஷாலினி நாகேந்திரம்**
( சுகி )

(திதி : ஆவணி சதுர்த்தி 10.09.2021)

அன்னைக்கு ஓரே பிள்ளை
அனைவருக்கும் செல்லப்பிள்ளை
உனை விரும்பாதோர் யாருமில்லை
அம்மா என்று கட்டியணைக்கும் உன்
கைகள் சென்ற இடம் ஏதம்மா
திரும்ப முடியாத பாதையில்
சொல்லாமல் பிரிந்தாயே!
பாசத்தின் உறைவிடமே! பண்பின் ஒளி விளக்கே!
உற்றார் சுற்றமும் கூடிக்களித்த உறவுகளை
கைவிட்டுச் சென்றதேனோ!

**மீளாத்துயில் கொண்டு எம்மை**
**ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்றீரே**
**கலையாத நினைவுகளுடன் உதிரும் கண்ணீர்**
**பூக்களால் அர்ச்சிக்கின்றோம் உம் ஆத்ம சாந்திக்காய்!**

(C-2633)

அல்வாய் தெற்கு, இலகடி, அல்வாய்.

திருமதி ஞானகலாவதி நாகேந்திரம்

# பொருளாதாரத்தை மீட்க ரணிலே ஒரே தீர்வு

## ருவான் விஜேவர்தன

(கொழும்பு)

வீழ்ந்து வரும் நாட்டின் பொருளாதாரத்தைமீண்டும் கட்டியெழுப்புவதற்கு ஐக்கிய தேசியக்கட்சியின் அரசாங்கம் நாட்டில் மீண்டும் ஆட்சியமைக்க வேண்டும் என்பதே ஒரே தீர்வு என அக்கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் மாத்திரமே கொரோனா வைரஸை ஒழிப்பதற்கான வேலைத்திட்டங்கள் காணப்படுகின்றன. நாட்டுக்கு ரணில் போன்ற அறிவார்ந்த தலைவர்கள் வேண்டுமென நாட்டின் பெரும்பான்மையான மக்கள் விரும்புவதாகவும் அவர் கூறினார்.

நாட்டில் தற்போது ஆட்சியில் உள்ளவர்களை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கு 69 இலட்சம் மக்கள் தங்களது வாக்குகளைப் பயன்படுத்தினார்கள். இன்று 69 இலட்சம் மக்களின் எதிர்பார்ப்புக்களும் சூனியமாகியுள்ளது என்றார்.

இன்று நாடு நாசமாக்கப்பட்டு நாட்டு மக்கள் நிர்க்கதியாகியுள்ளனர். இவர்களின் எதிர்காலம் தொடர்பான நம்பிக்கை இல்லாது போயுள்ளது. இதனால் நாட்டு மக்கள் மாற்றம் ஒன்றைத் தேடி வருகிறார்கள். நாட்டை ஐக்கிய தேசியக் கட்சியால் மாத்திரமே மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்றார். (ம-03)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.